# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

# ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 49 — 1973 මාර්තු 02 වැනි සිකුරාදා — 1973.03.02

49 ஆம் இலக்கம்—1973 ம் ஆண்டு மாச்சு மாதம் 02 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனம் .. .. .. | — |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. .. | — |
| அமைச்சரவை நியமனங்களும் பிறவும் .. .. | — |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் .. | — |
| நீதிச் சேவைகள் ஆலோசனைச் சபையின் நியமனங்களும் பிறவும் .. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | 147 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. . | 149 |
| விலைக்கட்டளைகள் .. .. .. | 153 |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் .. .. | — |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் .. .. | — |
| வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. .. | — |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் .. | 160 |
| மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| " மதுவரிச் சட்ட " அறிவித்தல்கள் .. .. | — |


கவனிக்க.—இரத்தினக்கல் (மன்னிப்பு) சட்டமூலம் 1973 ம் ஆண்டு பெப்புருவரி மாதம் 15 ந் திகதிய ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்கு குறைநிரப்பியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

## மற்றைய நியமனங்களும் பிறவும்

1973 இன் இல. 97

எண். : டி. 252/ஆர். ஈ. சி.ரி./2

**இலங்கை வான் படை—பதவியேற்றங்கள்**

1972 ஓகத்து 1 ஆம் திகதியிலிருந்து ஃபிளைற் லெஃவ்ரினன்ற் ஆகக் கடவர் :—

ஃபிளையிங் ஒபிசர் திலகரத்ன பண்டார பனன்வல
(01136)—நிருவாக

ஃபிளையிங் ஒபிசர் முதியன்சேலாகே பாலித விஜேசூரிய
(01139)—நிருவாக/பேரணி

ஃபிளையிங் ஒபிசர் நிஹால் தம்மிக்கா த ஸொய்சா
(01140)—நிருவாக/பேரணி

ஃபிளையிங் ஒபிசர் உப்பாலி வனசிங்ஹ
(01141)—தொழில்நுட்ப/பொறிவலாளர்

1972, ஓகத்து 1 ஆம் திகதியிலிருந்து தற்காலிக ஃபிளைற் லெஃவ்ரினன்ற் ஆகக் கடவர் :—

ஃபிளையிங் ஒபிசர் அருணசலம் நரேந்திரா
(01142)—தொழில்நுட்ப/பொறிவலாளர்

1973, பெப்புருவரி 2 ஆம் திகதியிலிருந்து ஃபிளைற் லெஃவ்ரினன்றகள் ஆகக் கடவர் :—

ஃபிளையிங் ஒபிசர் மோஹனலால் யார்ணெல் வல்பிற்ற
(01143)—நிருவாக

ஃபிளையிங் ஒபிசர் ஹேமேந்திர சிருனந்த பர்ணந்து
(01144)—ஜி. டி./பி.

வி. ரி. ஜயசிங்ஹ,
செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு பெப்புருவரி மீ 17 ந உ.

3-149—02.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 49

---

1973 இன் இல. 98

**நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)**

கொழும்பு 9, கடவலமுல்ல இலக்கம் 101/6 " விஜய " வில் வசிக்கும் செல்வி மானெல் டிசயறி விஜயவீர அவர்கள் கொழும்பு நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில பாஷையில் கடமைபார்க்கும் நொத்தாரிசுவாக கௌரவ பொது நிருவாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

பி. மகாதோவா,
பொது நிருவாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர்.

1973 ம் ஆண்டு பெப்புருவரி மீ 02 ந உ.

3-77—02.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 49

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு மே மீ 05 ந உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

1973 இன் இல. 99

நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)

தெஹிவல "இராமநாதன்பிளேஸ்" இல. 3 ல் வசிக்கும் சா. சுசில் முனசிங்க அவர்கள் கொழும்பு நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில பாஷையில் கடமைபார்க்கும் நொத்தாரிசுவாக கௌரவ பொது நிருவாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

பி. மகாதேவா,
பொது நிருவாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு
அலுவல்கள் அமைச்சின் செயலாளர்.

1973 ம் ஆண்டு பெப்புருவரி மீ 05 ந் உ.

3-76—02.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 49

---

1973 இன் இல. 100

நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)

மத்துகம, வலகெதற ஹேன்பிட "சிசில" என்னும் வீட்டில் வசிக்கும் டொன் விக்டர் பியதாசா ஜாகொட ஆராச்சி அவர்கள் களுத்துறை நீதி பரிபாலன ஆதிக்கத்துக்குள் சிங்கள பாஷையில் கடமைபார்க்கும் நொத்தாரிசுவாக கௌரவ பொது நிருவாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

பி. மகாதேவா,
பொது நிருவாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு
அலுவல்கள் அமைச்சின் செயலாளர்.

1973 ம் ஆண்டு பெப்புருவரி மீ 05 ந் உ.

3-88—02.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 49.

---

1973 இன் இல. 101

நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)

கம்பொல மேல்சிப்பப் பிடியவீதி, இலக்கம் 16 ல் வசிக்கும் துவான் லத்தீப் ஜமன் ஹஜ்ஜி அவர்கள் கம்பொல நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில பாஷையில் கடமைபார்க்கும் நொத்தாரிசுவாக கௌரவ பொது நிருவாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

பி. மகாதோவா,
பொது நிருவாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு
அலுவல்கள் அமைச்சின் செயலாளர்.

1973 ஆம் ஆண்டு பெப்புருவரி மீ 05 ந் உ.

3-81—02.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 49

---

1973 இன் இல. 102

நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)

விஜினுகடு ஆரச்சிகே தொன் ஐசாக் விமலவீர அவர்கள் கலேவல வசிப்பிடத்திலும் அலுவலகத்திலும் வககோட்டே மேலதிக அலுவலகத்திலும் மாத்தளை நீதிபரிபாலன ஆதிக்கத்துள் சிங்கள மொழியில் உறுதி எழுதும் நொத்தாரிசுவாக கௌரவ பொது நிருவாக, உள்நாட்டு, உள்ளூராட்சி அலுவல்கள் அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப் பட்டுள்ளார்.

பி. மகாதேவா,
பொது நிருவாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு
அலுவல்கள் அமைச்சின் செயலாளர்.

1973 ம் ஆண்டு பெப்புருவரி மீ 05 ந் உ.

3-79—02.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 49.

---

1973 இன் இல. 103

நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)

வெள்ளாம்போக்கட்டி, கொடிகாமத்தில் வசிக்கும் பொன்னையா வெற்றிவேலு அவர்கள் சாவகச்சேரி நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில பாஷையில் கடமைபார்க்கும் நொத்தாரிசுவாக கௌரவ பொது நிருவாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

பி. மகாதேவா,
பொது நிருவாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு
அலுவல்கள் அமைச்சின் செயலாளர்.

1973 ஆம் ஆண்டு பெப்புருவரி மீ 05 ந் உ.

3-78—02.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 49

---

1973 இன் இல. 104

பொது எழுதுநர் சேவையின் அதிசிறப்பு வகுப்புக்குப் பின்வரும் நியமனங்கள் செய்யப்பட்டுள்ளன :—

பொது எழுதுவினைஞர் சேவையின் அதிசிறப்பு வகுப்பைச் சேர்ந்த திரு. யு. ஆர். ரி. பீ. முவபிட்டி அவர்கள் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் அலுவலக உதவியாளராக 1972 திசெம்பர் 01 ஆம் திகதியிலிருந்து மறுகட்டளை பிறப்பிக்கப்படும் வரை கடமைபுரிய.

1972 யூலை 17 ம் திகதி தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை பொது எழுதுவினைஞர் சேவையின் அதிவிசேஷ வகுப்பைச் சேர்ந்த திரு. ரி. ஜீ. எப் மென்டிஸ் அவர்கள் கொழும்பு பரிபாலன மாவட்டத்தின் அதிகார பூர்வமான அரசாங்க அதிபரின் அலுவலராகக் கடமை புரிய.

பொது எழுதுநர் சேவையின் மேல் வகுப்பைச் சேர்ந்த திரு. ரி. பி. வீரக்கோன் அவர்கள் 1972 செப்ரெம்பர் மாதம் 02 ந் திகதி தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை, மாத்தளை பரிபாலன மாவட்டத்தின் அதிகார பூர்வமான அரசாங்க அதிபரின் அலுவலக உதவியாளராகக் கடமைபுரிய.

பொது எழுதுநர் சேவையின் மேல் வகுப்பைச் சேர்ந்த திரு. கே. விஜேசிங்க அவர்கள், 1972 ம் ஆண்டு நவம்பர் மாதம் 01 ந் திகதி தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை, மாத்தளை பரிபாலன மாவட்டத்தின் அரசாங்க அதிபரின் அலுவலக உதவியாளராகக் கடமை புரிய.

1971, ஒக்டோபர் 01 ம் திகதி தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை பொது எழுதுவினைஞர் சேவையின் I ம் வகுப்பைச் சேர்ந்த திரு. ரி. ஜீ. எப். மென்டிஸ் அவர்கள் கொழும்பு பரிபாலன மாவட்டத்தின் அதிகாரபூர்வமான அரசாங்க அதிபரின் அலுவலக உதவியாளராகக் கடமைபுரிய.

பொது எழுதுவினைஞர் சேவையின் முதலாம் வகுப்பைச் சேர்ந்த திரு. ஜே. ஜே. வாஸ் அவர்கள் 1972 பெப்ரவரி 07 ந் திகதி தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை அம்பாரை, பரிபாலன மாவட்டத்தின் அதிகார பூர்வமான அரசாங்க அதிபரின் அலுவலக உதவியாளராகப் பதில்கடமைபுரிய.

பொது எழுதுவினைஞர் சேவையின் I ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. எஸ். ரி. செனரத் அவர்கள் பதுளை நிருவாக மாவட்டத்தின் அதிகார பூர்வமான அரசாங்க அதிபரின் அலுவலக உதவியாளராக 1972 யூலை 26 ந் தேதியிலிருந்து மறுகட்டளை பிறப்பிக்கப்படும் வரை கடமைபுரிய.

1972 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 06 ம் திகதி தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை பொது லிகிதர் சேவையின் I ம் தரத்தைச் சேர்ந்த திரு. சீ. விசாகப்பெருமாள் அவர்கள், இரத்தினபுரி பரிபாலன மாவட்டத்தின் அதிகார பூர்வமான அரசாங்க அதிபரின் பதில் அலுவலக உதவியாளராகக் கடமைபுரிய.

பொது எழுதுநர் சேவையின் I ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. பி. எஸ். ஜயசிங்க அவர்கள், மேற்கொண்டு கட்டளைகள் பிறப்பிக்கப்படும் வரை 1972, ஆகஸ்ட் 01 ஆந் திகதியிலிருந்து கிராமாபிவிருத்தித் திணைக்களத்தின் பணிமனை உதவியாளராகப் பதிற்கடமையாற்றுவதற்கு.

1972, செப்தெம்பர் 01 ந் திகதி தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை பொது எழுதுவினைஞர் சேவையின் I ம் தரத்தைச் சேர்ந்த திரு. எம். ஈ. வீ. பெரேரா அவர்கள் கொழும்பு பரிபாலன மாவட்டத்தின் அதிகாரபூர்வமான அரசாங்க அதிபரின் அலுவலக உதவியாளராக கடமைபுரிய.

1972 பெப்ரவரி மாதம் 01 ம் திகதி தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை பொது எழுதுவினைஞர் சேவையின் I ம் வகுப்பைச் சேர்ந்த திரு. ஆர். பீ. சேனரத்ன அவர்கள் குருநாகல் பரிபாலன மாவட்டத்தின் அரசாங்க அதிபரின் காரியாலய உதவியாலராக கடமைபுரிய.

1972, செப்தெம்பர் மாதம் 16 ம் திகதி தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை பொது எழுதுவினைஞர் சேவையின் 1 ம் வகுப்பைச் சேர்ந்த திரு. டபிள்யு. டபிள்யு. சி. எச். பெர்னாந்து இலங்கை சுங்க இலாகாவில் பதில் நிருவாக உத்தியோகத்தராகக் கடமைபுரிய.

மறுகட்டளை பிறப்பிக்கப்படும் வரை 1972, நவம்பர் மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் பொது எழுதுவினைஞர் சேவையின் I ம் வகுப்பைச் சேர்ந்த திரு. ரீ. டீ. ஆர். குணவர்த்தன கட்டட நிர்மாண அமைச்சின் பதில் அலுவலக உதவியாளராக கடமையாற்றுவார்.

ஆர். எம். பி. சேனநாயக்க,
அரசாங்க நிருவாகப் பணிப்பாளர் அதிபதிக்காக.

அரசாங்க நிருவாகத் திணைக்களம்,
டொறிங்ரன் சதுக்கம்,
கொழும்பு 7, 1973 ம் ஆண்டு பெப்ரவரி மீ 21 ந் வ.

3–220—02.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 49

---

# அரசாங்க அறிவித்தல்கள்

ச. வ.—பி. 23/63.

## 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டம்

1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 58 (4) (எ) என்னும் பிரிவினால் நிதி அமைச்சருக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு ஆக்கப்பட்ட கட்டளை.

என். எம். பெரேரா,
நிதி அமைச்சர்.

கொழும்பு,
1973, பெப்புரவரி மாதம் 20 ஆந் தேதி.

கட்டளை

1. (1) 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 58 ஆம் பிரிவின் (1) ஆம், (2) ஆம், (3) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள், இலங்கை பிரசையல்லாதவரும் தரும நம்பிக்கைப் பொறுப்பின் நம்பிக்கைப் பொறுப்பாளருமான ஒருவருக்கு அத்தகைய நம்பிக்கைப் பொறுப்பின் நோக்கங்களுக்காக ஏதேனும் காணியை அல்லது ஏதேனுங் கம்பனியிலுள்ள எவையேனும் பங்குகளைக் கைமாற்றுதல் தொடர்பாக.

(அ) அத்தகைய கைமாற்றுகை அத்தகைய நம்பிக்கைப் பொறுப்பின் நோக்கங்களுக்கானதாயின்,

(ஆ) அந்த நம்பிக்கைப் பொறுப்புக்கு இரண்டு நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு மேற்பட்டவர் இருந்தால் ; அத்துடன்

(இ) நம்பிக்கைப் பொறுப்பாளரில் பெரும்பாலானோர் இலங்கைப் பிரசைகளாயிருந்தால்—

ஏற்புடையனவாதலாகாது.

(2) இக்கட்டளையில் " தரும நம்பிக்கைப் பொறுப்பு " என்ற சொல்லமைப்பு (87 ஆம் அத்தியாயமான) நம்பிக்கைப் பொறுப்புக்கள் கட்டளைச் சட்டத்திலுள்ள அதே கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3–152—02.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 49

---

எல். டி.—பி. 7/63

## 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்நாட்டரசிறைச் சட்டம் 16 அ எண்ணும் பிரிவின் கீழான அறிவித்தல்

1969 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்நாட்டரசிறைச் சட்டத்தின் 16 அ என்னும் பிரிவின்படி எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, நிதியமைச்சர், நாணயக்கார பத்திரகே மாட்டின் பெரேரா ஆகிய நான் " சிலோன் ஹார்ட் அசோசியேசன் " யை அப்பிரிவின் நோக்கத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட அறநிலைய மொன்றென இவ்வறிவித்தல் மூலம் வெளிப்படுத்துகின்றேன்.

என். எம். பெரேரா,
நிதியமைச்சர்.

கொழும்பு,
1973 ம் ஆண்டு பெப்ரவரி மீ 20 ந் வ.

3–153—02.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 49

---

## 1972 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம்

1 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளை

1972 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டத்தின் 1 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு நீதியமைச்சர் பீலிக்ஸ் ரெஜினோல்ட் டயஸ் பண்டாரநாயக்கா ஆகிய நான், 1973, மார்ச்சு முதலாம் நாளை அச்சட்டத்தின் 2 ஆம் பிரிவு, 3 ஆம் பிரிவு, 4 ஆம் பிரிவு என்பனவற்றின் ஏற்பாடுகள் நடைமுறைக்கு வரவேண்டிய தேதியாக இக்கட்டளைமூலம் நியமிக்கின்றேன்.

நீதியமைச்சர்.

கொழும்பு, 1973 ம் ஆண்டு பெப்புருவரி மீ 21 ந் வ.

3–133—02.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 49

---

## பிறப்புகள், இறப்புகள் பதிவுச் சட்டம்

5 ம் பிரிவின் கீழான அறிவித்தல்

(110ம் அத்தியாயமான) பிறப்புகள் பதிவுச் சட்டத்தின் 5 ம் பிரிவின்படி எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு, அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் பீலிக்ஸ் றெஜினோல்ட் டயஸ் பண்டாரநாயக்க ஆகிய நான் 1935 ம் ஆண்டு செற்றெம்பர் 20 ந் தேதிய 8,146 ம் இலக்க கசற்றின் அனுபந்தத்தில் பிரசுரிக்கப்பட்டு காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான அறிவித்தலை அதற்கான அட்டவணையில் " கீழ் மாகாணம்—மட்டக்களப்பு " என்னும் தலைப்பின் கீழ் :—

(1) ஏறுவூர் பிரிவு சம்பந்தமான 12 ம் விடயத்திற்குப் பதிலாக, இதற்கான " அ " என்னும் அட்டவணையிற் தரப்பட்டுள்ள விடயத்தை இடுவதன் மூலமும் ;

(2) 12 ம் விடயத்தை உடனடுத்து இதற்கான " ஆ " என்னும் அட்டவணையிற் தரப்பட்டுள்ள 12 " அ ", 12 " ஆ ", 12 " இ " என்னும் புதிய விடயங்களைச் சேர்த்தல் மூலமும்.

1973 ம் ஆண்டு மார்ச் மாதம் முதலாந் திகதியிலிருந்து இவ்வறிவித்தல் மூலம் மேலும் திருத்துகிறேன்.

பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்க,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு, 1973 ம் பெப்ரவரி மீ 06 ந் வ.

அட்டவணை " அ "

12. பின்வரும் கிராமங்களையடக்கிய ஏறுவூர் பிரிவு :—
ஏறுவூர் 1 ம் குறிச்சி
ஏறுவூர் 3 ம் குறிச்சி
ஐயங்கேணி (பகுதி)
மீராடகேணி
புன்னைக்குடா (பகுதி)
தளவாய் (பகுதி)
தாமரைக்கேணி

12அ. பின்வரும் கிராமங்களை அடக்கிய ஆறுமுகத்தான் குடியிருப்பு பிரிவு :—

ஆறுகத்தான் குடியிருப்பு
மயிலம்பாவெளி
சவுக்கடி
தன்னாமுனை
வேடகுடியிருப்பு

12ஆ. பின்வரும் கிராமங்களை அடக்கிய பங்குடாவெளி பிரிவு :—

ஏறுவூர் 4ம் குறிச்சி
ஏறுவூர் 5 ம் குறிச்சி
இலுபட்டிச்சேனை

ஐயன்கேணி (பகுதி)
கொம்பர் சேனை
மக்குலானை
நெல்லிப்போடியார் கல்சேனை

பாலமடு
பங்குடாவெளி
புன்னைக்குடா (பகுதி)
சங்குலை

தளவாய் (பகுதி)
தொடுவில்சோலை
வேப்பவட்டவான்

12இ. பின்வரும் கிராமங்களை அடக்கிய நாகம் பிரிவு :—

கரடியனாறு
கரடியன் குளம்

கித்துள்வெவ
கோப்பாவெளி
கொஸ்கொல்ல

கொட்டச
கும்புறுவெளி
மரப்பாலம்

மாவடிச்சேனை
மாவலையாறு
புல்லுமலை அல்லது பெரிய புல்லுமலை

புத்தம்புரி
நாகம்புதூர்
சின்னப்புல்லுமலை

சோகம்பி
தருப்புல்லுவெளி
தும்பலன்சோலை

உறுகாமம்
வெள்ளைகல்தளவாய்
வெலிகாகண்டிய

3–23—02.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 49.

---

எல். டி.—பி. 12/68.

**1968 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க உல்லாசப்பிரயாண அபிவிருத்திச் சட்டம்**

பிரிவு 2 (1) இன் கீழான கட்டளை

1968 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க உல்லாசப்பிரயாண அபிவிருத்திச் சட்டத்தின் 2 (1) என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு கப்பற்றொழில் உல்லாசப்பிரயாண அமைச்சர் புஞ்சி பண்டா குணதிலக கலுகல்லே ஆகிய யான், இதற்கான அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள காணி, 1966 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட பகிரங்கக் கூட்டுத்தாபனம் ஒன்றான இலங்கை உல்லாசப்பிரயாணச்சபையின் உல்லாசப்பிரயாண அபிவிருத்தித்திட்டம் ஒன்றின் நோக்கத்துக்காகக் கொள்ளப்படுதலை இக்கட்டளை மூலமாக அங்கீகரிக்கிறேன்.

பி. பி. ஜீ. கலுகல்லே,
கப்பற்றொழில், உல்லாசப்பிரயாண
அமைச்சர்.

கொழும்பு, 1973 ம் ஆண்டு பெப்பிரவரி மீ 19 ந் உ.

**அட்டவணை**

மேற்கு மாகாணம் களுத்தரை மாவட்டத்து களுத்தரை தொட்டமுனை அளுத்கம்பத்தையிலுள்ள மொரகல்லேயில் அமைந்துள்ளதும், உரிமம்பெற்ற நில அளவையாளர் ஜி. அம்பெப்பிட்டியாவினால் தயாரிக்கப்பட்ட 1971 திசம்பர் 5, 20 ஆகிய தேதிகளைக்கொண்ட 312 ஆம் இலக்க மாதிரிப்படத்தில் ஏ 1 என்னும் துண்டாகக் காட்டப்பட்டதும் பின்வருமாறு எல்லைகளைக்கொண்டதும் 0 ஏ 0 றூ. 17·850 பேச்சர்ஸ் விஸ்தீரணத்தைக் கொண்டதுமான, புஞ்சிமலிமியவத்தை அல்லது தம்பககவத்தை எனவும், புஞ்சிமலிமியவத்தை அல்லது புஞ்சிநயிதகெவத்தை எனவும், புஞ்சிமலிமியவத்தை அல்லது அல்கெவத்தை மூசிகவெலா எனவும், பாலுகெதரவத்தை அல்லது பரத்தலவத்தை எனவும் அழைக்கப்படுவதுமான காணியடங்கிலும், அதிலும் அதனூடாகவும் அதன்மீதும் ஆட்கள் நடந்துபோயவருவதற்கும் வாகனப்போக்குவரத்துக்கும் உள்ள வழி, இடவசதி உரிமையும் :—

வடக்கு : புஞ்சிமலிமியவத்தை அல்லது தம்பகவத்தை, புஞ்சிமலிமியவத்தை அல்லது புஞ்சிநயிதகெவத்தை, புஞ்சிமலிமியவத்தை அல்லது அல்கெவத்தை, மியூசிகவலே என்பவற்றின் பகுதிகள் ;

கிழக்கு : மியூசிகவலே, பாலுகெதரவத்தை அல்லது பரத்தலவத்தை என்பவற்றின் பகுதிகள் ;

தெற்கு : மகாமலிமியவத்தை அல்லது குருன்னகெலவத்தை (புதிய கொன்பிவி பீச் ஹோற்றலின் வெளி எல்லைச்சுவர்) ;

மேற்கு : மகாமலிமியவத்தை அல்லது குருன்னகெல்வத்தையும் (புதிய கொன்பிவி பீச் ஹோற்றலின் வெளி எல்லைச்சுவர்) தெருவும்.

3–151—02.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 49

---

எல்.டி-பி 152/34

***மாஸ்டர்கள் அற்றென்டன் கட்டளைச்சட்டம்***

*(369 ஆம் அத்தியாயமான) மாஸ்டர்கள் அற்றென்டன் கட்டளைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் கப்பற்றொழில், உல்லாசப் பிரயாண அமைச்சரால் கொழும்பு கப்பற்றுறைக்கென அமைத்துத் தாபிக்கப்பட்ட விதி.*

பீ. பி. ஜீ. கலுகல்லே,
கப்பற்றொழில், உல்லாசப்பிரயாண
அமைச்சர்.

கொழும்பு,
*1973 ம் ஆண்டு பெப்ருவரி மீ 13 ந் உ*

***விதிகள்***

*1936 ஆம் ஆண்டு ஒத்தோபர் 16 ஆம் திகதிய 8,251 ஆம் இலக்கக் கசெற்றுக்கான அனுபந்தத்தில் வெளியிடப்பட்ட 1936 ஆம் ஆண்டின் கொழும்புக் கப்பற்றுறை விதிகள் ஆனவை, 54(அ) என்னும் விதியை உடனடுத்துப் பின்வரும் புதிய விதிகளைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றன :—*

*"54 ஆ. மாஸ்டர் அற்றென்டன்டால் அதன் சார்பாக வழங்கப்பட்ட உத்தரவுச் சீட்டின் அதிகாரத்தின் கீழொழிய கப்பற்றுறையில் ஆள் எவராயினும் கழிவுப் பொருட்களை அகற்றுதலை மேற்கொள்ளலாகாது.*

*54 இ. 54 (ஆ) என்னும் விதியில் குறிப்பிடப்பட்ட உத்தரவுச் சீட்டைப் பெறவிரும்பும் ஆள் ஒவ்வொருவரும் மாஸ்டர் அற்றென்டன்டுக்கு எழுத்து மூலமாக விண்ணப்பஞ் செய்தல் வேண்டும்.*

*(ii) அத்தகைய ஒவ்வொரு விண்ணப்பமும் பின்வருவதனைக் குறிப்பிடுதல் வேண்டும்:—*

*(அ) விண்ணப்பகாரரின் பெயர், விண்ணப்பகாரர் ஒரு கம்பனியாக, குழுமமாக அல்லது பங்குடைமையாகவிருந்தால் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப அதன் தொழிற் பெயர், பணிப்பாளரின், உரிமையாளரின் அல்லது பங்காளரின் பெயர்கள்;*

*(ஆ) விண்ணப்பகாரரின் பிரதான தொழிலிடத்தின் முகவரி;*

*(இ) விண்ணப்பகாரர் (145 ஆம் அத்தியாயமான) கம்பனிகள் கட்டளைச் சட்டத்தின்கீழ்ப் பதிவு செய்யப்பட்ட கம்பனியாயின் அத்தகைய கம்பனியின் பதிவெண்.*

54 ஈ. (அ) மாஸ்டர் அற்றென்டன், தாம் அவசியமெனக் கருதும் அத்தகைய விசாரணையின்பின், அத்தகைய வேலையை விண்ணப்பகாரர் திருப்திகரமாகச் செய்ய முடியாதெனக் கருதுமிடத்து அத்தகைய உத்தரவுச் சீட்டை வழங்க மறுத்தல்;

(ஆ) அத்தகைய வேலையைக் கப்பற்றுறை ஆணைக் குழுவோ கூட்டுத்தாபனம் ஒன்றுக்கூடாக அல்லது நேரடியாக நிதி சார்ந்த அக்கறையொன்றை அரசாங்கம் கொண்டிருக்கும் வேறெந்த நிறுவனமோ திருப்திகரமாக மேற்கொள்ள முடியுமென அவர் கருதுமிடத்து அத்தகைய எந்த உத்தரவுச் சீட்டையும் அவர் வழங்க மறுத்தல்;

அவருக்குக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

54. உ. (அ) அத்தகைய வேலையை எந்த ஆளாவது திறமையின்மையாகவோ அல்லது தகுந்த முற்பாதுகாப்புக்கள் அல்லது முற்காப்பீடுகள் இன்றிச் செய்தால்;

(ஆ) அத்தகைய வேலையைக் கப்பற்றுறை ஆணைக் குழுவோ கூட்டுத்தாபனம் ஒன்றுக்கூடாக அல்லது நேரடியாக நிதிசார்ந்த அக்கறையொன்றை அரசாங்கம் கொண்டிருக்கும் வேறெந்த நிறுவனமோ திருப்திகரமாக மேற்கொள்ள முடியுமென அவர் கருதுமிடத்து,

மாஸ்டர் அற்றென்டன் அத்தகைய உத்தரவுச்சீட்டை நீக்குதல் அவருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்."

3-41—02.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 49

---

எல். டி.—பி. 23/50

### ஈட்டுச் சட்டம்

(89ம் அத்தியாயமான) ஈட்டுச் சட்டத்தின் பிரிவு 3 (இ) யினுல் எனக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டும், சொல்லப்பட்ட சட்டத்தின் பிரிவு 114 (2) ன் கீழ் ஆக்கப்பட்ட சபையின் விதப்புரையின் மீதும், வர்த்தகப் பணிப்பாளர் கிரி பண்டா திசாநாயக்க ஆகிய நான், இத்துடனுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்ட நிறுவனவங்களுள் ஒவ்வொன்றும் அச்சட்டத்தின் நோக்கங்களுக்கென அங்கீகரிக்கப்பட்ட ஒரு கடன் கொடுக்கும் நிலையமாகவிருக்குமென்பதை இவ்வறிவித்தல் மூலம் வெளிப்படுத்துகிறேன்.

கே. பி. திசாநாயக்க,
வர்த்தகப் பணிப்பாளர்.

கொழும்பு, 14.2.1973.

அட்டவணை

1. த. றுபி விஞன்ஸ் கொம்பனி
2. எல். பி. விஞன்ஸ் லிமிட்டெட்

3-29/1—02.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 49

---

எல். டி.—பி. 16/53

### நம்பிக்கைப்பொறுப்புப் பற்றுச்சீட்டுக் கட்டளைச்சட்டம்

(86 ம் அத்தியாயமான) நம்பிக்கை சீட்டுக் கட்டளைச்சட்டத்தின் பிரிவு 5 (1) (அ) வினுல் எனக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு, வர்த்தகப் பணிப்பாளர் கிரி பண்டா திசாநாயக்க ஆகிய நான், இத்துடனுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்ட நிறுவனங்களுள் ஒவ்வொன்றும், அக்கட்டளைச்சட்டத்தின் நோக்கங்களுக்கென அங்கீகரிக்கப்பட்ட ஒரு கடன் கொடுக்கும் நிலையமாகவிருக்குமென்பதை இவ்வறிவித்தல் மூலம் வெளிப்படுத்துகிறேன்.

கே. பி. திசாநாயக்க,
வர்த்தகப் பணிப்பாளர்.

கொழும்பு, 14.2.1973.

அட்டவணை

1. த. றுபி விஞன்ஸ் கொம்பனி.
2. எல். பி. விஞன்ஸ் லிமிட்டெட்.
3. வின்கோ லிமிட்டெட்.

3-29/2—02.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 49

---

எல்.டீ.—பீ.

### கூலி நிருணய சபைக் கட்டளைச் சட்டம்

அறிவித்தல்

தீப்பெட்டி உற்பத்தித் தொழிலுக்கான கூலி நிருணய சபை, (சட்டவாக்கங்களின் 136 ம் அத்தியாயமாகிய) கூலி நிருணய சபைக் கட்டளைச் சட்டத்தின் 30 ம் பிரிவுவாயிலாகத் தமக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக்கொண்டு, இதனகத்தேயுள்ள அட்டவணையிற் காட்டப்பட்டிருக்கும் வகையாகத் தீர்மானங்களை மாற்றிக்கொள்ளவிருக்கும் தமது கருத்தினை அக் கட்டளைச் சட்டத்தின் 28 ம் பிரிவில் அமைந்துள்ள ஏற்பாடுகளுக்கமைய, இத்தால் அறிவிக்கின்றது.

உத்தேசிக்கப்பட்டுள்ள தீர்மானங்களுக்கெதிரான ஆட்சேபனைகள், 1972 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 30 ந் தேதி நண்பகல் 12 மணிவரையும் சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படுவனவாகும்.

அப்படிப்பட்ட ஆட்சேபனை ஒவ்வொன்றும், அவ்வண்ணம் ஆட்சேபிப்பதற்கான நியாயங்களைக்காட்டும் கூற்றுடன், எழுத்துவாயிலாக அனுப்பப்படுதல்வேண்டும்.

டபிள்யு. எல். பி. த. மெல்,
தலைவர்,
தீப்பெட்டி உற்பத்தித் தொழிலுக்கான கூலி நிருணய சபை.

தொழிற்றிணைக்களம்,
கொழும்பு 5, 1973 ம் ஆண்டு பெப்புருவரி மாதம் 19 ந் தேதி.

அட்டவணை

தீப்பெட்டி உற்பத்தித் தொழிற் கூலி நிருணய சபையால் ஆக்கப்பட்டு 1947 ம் ஆண்டு மே மாதம் 30 ந் தேதி வெளிவந்த 9,708 ம் இலக்க கசெற்றிற் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலினகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்டவையும், காலத்திற்குக்காலம் மாற்றப்பட்டவையுமான தீர்மானங்கள், அந்த அட்டவணையின் IV ம் பாகத்தில் " அரசாங்க விடுமுறைகள் " என்ற தலைப்பின்கீழ் 1 ம் பந்திகளுக்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன்மூலம் மேலும் மாற்றப்படுதல்வேண்டும் :

" அரசாங்க விடுமுறைகள்

1. (அ) இப்பந்தியினதும் 2 ம் பந்தியினதும் ஏற்பாடுகளுக்கமைய, வேலைக்கமர்த்துபவரொவ்வொருவரும் தம்மிடம் வேலை பார்க்கும் தொழிலாளிகள் யாவருக்கும் 1971 ம் ஆண்டின் 29 ம் இல. விடுமுறை அதிகாரச்சட்டத்தின் பொருளுக்கமைய பின்வரும் அரசாங்க விடுமுறைகளை வேதனத்துடன்கூடிய விடுமுறைகளாக அனுமதித்தல்வேண்டும் :—

(1) தமிழ்த் தைப்பொங்கற்றிருநாள் ;
(2) சிங்கள, தமிழ்ப் புத்தாண்டுத் திருநாளுக்கு நேரடுத்து முந்திய நாள் ;
(3) சிங்கள, தமிழ்ப் புத்தாண்டுத் திருநாள் ;
(4) மே நாள் (மே 1ந் தேதி) ;
(5) சிங்கள விசாக மாதத்தின் பூரணை நாள் ;
(6) சிங்கள விசாக மாதத்தின் பூரணைக்கு நேரடுத்த நாள் ;
(7) குடியரசுத் திருநாள் (மே 22 ந் தேதி) ;
(8) பெரிய வெள்ளிக்கிழமை ;
(9) நத்தார்த் திருநாள் ;

(ஆ) (அ) ஆகிய உப-பந்தியிற் குறிப்பிடப்பட்ட அத்தகைய விடுமுறையொவ்வொன்றிற்கும் தொழிலாளியெவருக்கும் கொடுபடவேண்டிய வேதனமானது, அத்தகைய விடுமுறை நிகழும் மாதத்தில் ஒரு சாதாரண வேலைநாளுக்குக் குறித்த கீழெல்லைக் கூலி வீதமாயிருத்தல்வேண்டும்.

3-170—02.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 49

### கூலி நிருணய சபைக் கட்டளைச்சட்டம்

அறிவித்தல்

புகையிலைத் தொழிலுக்கான கூலி நிருணய சபை, (சட்டவாக்கங்களின் 136 ம் அத்தியாயமாகிய) கூலி நிருணய சபைக் கட்டளைச் சட்டத்தின் 30 ம் பிரிவு வாயிலாகத் தமக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, இதனகத்தேயுள்ள அட்டவணையிற் காட்டப்பட்டிருக்கும் வகையாகத் தீர்மானங்களை மாற்றிக்கொள்ளவிருக்கும் தமது கருத்தினை அக் கட்டளைச்சட்டத்தின் 28 ம் பிரிவில் அமைந்துள்ள ஏற்பாடுகளுக் கமைய, இத்தால் அறிவிக்கின்றது.

உத்தேசிக்கப்பட்டுள்ள தீர்மானங்களுக்கெதிரான ஆட்சேபனைகள், 1973 ம் ஆண்டு பங்குனி மாதம் 16 ந் தேதி நண்பகல் 12 மணி வரையும் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படுவனவாகும்.

அப்படிப்பட்ட ஆட்சேபனை ஒவ்வொன்றும், அவ்வண்ணம் ஆட்சேபிப்பதற்கான நியாயங்களைக்காட்டும் கூற்றுடன், எழுத்துவாயிலாக அனுப்பப்படுதல்வேண்டும்.

டபிள்யு. எல். பி. த மெல்,
தலைவர்,
புகையிலைத் தொழிலுக்கான
கூலி நிருணய சபை.

தொழிற்றிணைக்களம்,
கொழும்பு 5.
1973 ம் ஆண்டு பெப்புருவரி மீ 21 ந் உ.

#### அட்டவணை

புகையிலைத் தொழிலுக்கான கூலி நிருணய சபையால் ஆக்கப்பட்டு, 1966 ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 28 ந் தேதிய 14,692/6 ம் இலக்க அசாதாரணச் செய்திமடலிற் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலினகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்டவையும், 1972 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 29 ந் தேதிய 27 ம் இலக்கச் செய்திமடலிற் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலினகத்தே குறிக்கப்பட்டபடி மாற்றப்பட்டவையுமான தீர்மானங்கள், அந்த அட்டவணையின் V ம் பாகத்தில் "அரசாங்க விடுமுறைகள் (25 ம் பிரிவு)" என்னும் தலைப்பின்கீழ் 1 ம் பந்தியின் (அ) உப-பந்திக்குப் பதிலாகப் பின்வரும் உப-பந்தியினை இடுவதன்மூலம் மேலும் மாற்றப்படுதல்வேண்டும் :—

அரசாங்க விடுமுறைகள் (25 ம் பிரிவு)

(அ) இப்பந்தியினதும் (2) ம் பந்தியினதும் ஏற்பாடுகளுக்கமைய, வேலைக்கமர்த்துபவரொவ்வொருவரும் தம்மிடம் பணிபுரியும் தொழிலாளர்கள், விடுமுறை ஒவ்வொன்றினுக்கும் நேரடுத்து முந்திய 7 வேலைநாள்களுள்ளே 3 நாள்களுக்குக் குறையாமற் பணியாற்றியிருந்தால் அவர்கள் யாவருக்கும் 1971 ம் ஆண்டின் 29 ம் இலக்க விடுமுறை அதிகாரச்சட்டத்தின் பொருளுக்கமைய, பின்வரும் அரசாங்க விடுமுறைகளை ஊதியத்துடன் கூடிய விடுமுறைகளாக, வழங்குதல்வேண்டும் :—

(1) தமிழ்த் தைப்பொங்கற்றிருநாள்,
(2) சிங்கள, தமிழ்ப் புத்தாண்டு திருநாளுக்கு நேரடுத்து முந்திய நாள்,
(3) சிங்கள, தமிழ்ப் புத்தாண்டுத் திருநாள்,
(4) மே நாள் (மே 1 ந் தேதி),
(5) சிங்கள விசாக மாதத்தின் பூரணைக்கு நேரடுத்த நாள்,
(6) இலங்கைக் குடியரசுத் திருநாள் (மே 22 ந் தேதி),
(7) மீலா-துன்-நபி (நபிகள் நாயகம் ஸல் அவர்கள்) பிறந்த திருநாள்,
(8) பண்டாரநாயகா நினைவு நாள் (செத்தெம்பர் 26 ந் தேதி),
(9) நத்தார்த் திருநாள்.

3–174—02.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 49

---

### கூலி நிருணய சபைக் கட்டளைச் சட்டம்

அறிவித்தல்

பராமரிப்பு இல்லத் தொழிலுக்கான கூலி நிருணய சபையில், திரு. போல் ஸ்ரேச்சி வெளிநாடு சென்றிருந்த காலத்திலே உறுப்பினராகப் பதிற் பணி ஆற்றுவதற்காகத் தொழில் அமைச்சராற் கூலி நிருணய சபைக் கட்டளைச் சட்டத்தின் (சட்டவாக்கங்களின் 136 ம் அத்தியாயம்) 9 ம் பிரிவிற்கமைய நியமிக்கப்பட்ட திரு. ரீ. ஏ. மோய், திரு. போல் ஸ்ரேச்சி நாட்டுக்குத் திரும்பிவந்து கூலி நிருணய சபையிலே தொழில் வழங்குவோர் பிரதிநிதியாகப் பணிபுரியத் தொடங்கியுள்ளமையால், 1973 ம் ஆண்டு சனவரி 29 ந் தேதி தொடங்கிப் பதிற்கடமையாற்றுவதிலிருந்து நீங்கியுள்ளார் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஏ. ஈ. கோகனி மொரகொடை,
செயலாளர்,
தொழில் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு பெப்புருவரி மீ 20 ந் உ.

3–168—02.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 49

---

### 1954 ஆம் ஆண்டின் 37 ம் இலக்க தேசிய வீடமைப்பு அதிகாரச் சட்டம்

49 ம் பிரிவின் கீழான சான்றிதழ்

1954 ம் ஆண்டின் 37 ம் இலக்க தேசிய வீடமைப்பு அதிகாரச்சட்டத்தின் 49 ம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களின்படி, வீடமைப்பு நிர்மாண அமைச்சர் பீற்றர் ஜெரல்ட் பத்தோலோமியுஸ் கெனமன் ஆகிய நான், மேற் கூறப்பட்ட அதிகாரச் சட்டத்தின் 2 ம் பிரிவின் அடிப்படையில் வீடமைக்கும் நோக்கமாகக் கீழ்க்காணப்படும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணி அரசாங்கத்தினாற் சுவீகரிக்கப்பட வேண்டுமென இத்தால் அத்தாட்சிப் படுத்துகிறேன்.

பீ. ஜீ. பீ. கெனமன்,
வீடமைப்பு, நிர்மாண அமைச்சர்.

ஜீஎபீ/எசீஇயூ/129,
கொழும்பு,
1973 ம் ஆண்டு பெப்புருவரி மீ 13 ந் உ.

#### அட்டவணை

மேல்மாகாணம், கொழும்பு மாவட்டம், கொழும்பு மாநகரசபை எல்லைகளுக்குள்ளே அமைந்துள்ள திம்பிரிகசாய, பார்க் வீதியின் 181 ம் வரிமதிப்பு இல. கொண்ட ஒரு பகுதிக் காணியான 4 அடி அகலமும் 225 அடி நீளமும் கொண்ட ஒரு காணித்துண்டு, அதன் எல்லைகள் பின்வருமாறு :—

வடக்கு : அதே காணியின் எஞ்சிய பகுதி ;
கிழக்கு : முடிக்குரிய காணி ;
தெற்கு : பாக் வீதி ;
மேற்கு : மாநகரசபை வடிகால்.

3–82—02.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 49

---

### 1954 ஆம் ஆண்டின் 37 ம் இலக்க தேசிய வீடமைப்பு அதிகாரச் சட்டம்

49 ம் பிரிவின் கீழான சான்றிதழ்

1954 ம் ஆண்டின் 37 ம் இலக்க தேசிய வீடமைப்பு அதிகாரச்சட்டத்தின் 49 ம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களின்படி, வீடமைப்பு நிர்மாண அமைச்சர் பீற்றர் ஜெரல்ட் பத்தோலோமியுஸ் கெனமன் ஆகிய நான், மேற் கூறப்பட்ட அதிகாரச் சட்டத்தின் 2 ம் பிரிவின் அடிப்படையில் வீடமைக்கும் நோக்கமாகக் கீழ்க்காணப்படும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணி அரசாங்கத்தினாற் அங்கரிக்கப்பட வேண்டுமென இத்தால் அத்தாட்சிப் படுத்துகிறேன்.

பீ. ஜீ. பீ. கெனமன்,
வீடமைப்பு, நிர்மாண அமைச்சர்.

கொழும்பு,
1973.2.13.

#### அட்டவணை

மேல்மாகாணம், கொழும்பு மாவட்டம், கம்பஹா பெ. இ. உ. பிரிவு, பெலும் மஹார கிராம சேவகர் பிரிவு, கொழும்பு-கண்டி ரோட்டு நெடுக அமைந்துள்ள வெல்ல போதவத்தை அல்லது மில்லகஹாவத்தை என்றழைக்கப்படும் காணிக்குள்ளே கிட்டத்தட்ட ஒரு ஏக்கர் விஸ்தீரணமுள்ள ஒரு காணித்துண்டு அதன் எல்லைகள் பின்வருமாறு :—

வடக்கு : ஜீ. பேபிநோனாவினது காணி ;
கிழக்கு : கொழும்பு-கண்டிரோட்டு ;
தெற்கு : ஜீ. பீற்றர் சிங்கோவினது காணி ;
மேற்கு : வண்டிப்பாதை.

3–75—02.03.73—ந். திகதிய வர்த்தமானி இல. 49

# விலைக் கட்டளைகள்

உணவு விலைக் கட்டளை இலக்கம் தி/வி. க/3

**கோதுமை மா**

**விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்**

கட்டளை

173 ம் அத்தியாயமான விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 (2) ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 4 ம் பிரிவினால் உதவி உணவு விலைக்கட்டுப்பாட்டதிகாரிக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு திருகோணமலை பரிபாலன மாவட்டத்தின் உதவி (உணவு) விலைக்கட்டுப்பாட்டதிகாரி கியு கொல்மன் ஒரில்டன் ஈபட் ஆகிய நான் இக்கட்டளையால்—

(1) 1968 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 8 ம் திகதி வெளியான 14,827/1 ம் இலக்க அதிபிரத்தியேக இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரமான 1968 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 6 ம் திகதியைக் கொண்ட தி/5/68 ம் இலக்கக் கட்டளையை உடனடியாக எடுத்து விடுகின்றேன்.

(2) இதனோடிருக்கும் 1 ம் அட்டவணையில் 2 ம் பத்தியில் குறிக்கப்பட்டிருக்கும் மொத்த நிறை 150 இருத்தலுக்குக் குறையாத விலையாகக் குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எல்லைக்குள் இவ்விலைகளுக்குக் கூடுதலாக இத்திகதியிலிருந்து கோதுமை மாவை விற்றலாகாது.

(3) இதனோடிருக்கும் 2 ம் அட்டவணையில் 2 ம் பத்தியில் குறிக்கப்பட்டிருக்கும் விலையை ஒரு நிகர இருத்தல் கோதுமை மாவின் ஆகக்கூடிய சில்லறை விலையாகக் குறித்த அட்டவணையின் முதலாம் பத்தியில் விபரிக்கப்பட்ட பகுதிகளுக்குள் இவ்விலைகளுக்குக் கூடுதலாக இத்திகதியிலிருந்து கோதுமை மாவை விற்றல் ஆகாது.

(4) இக்கட்டளையின் நோக்கத்திற்காக—

(அ) 150 மொத்த இருத்தல் அல்லது அதற்குக் கூடிய தொகையான கோதுமை மாவை ஒரு தடவையில் அல்லது திருப்பி விற்பதற்காக விற்கும் விற்பனை மொத்த விற்பனையாகக் கருதப்படும் ;

(ஆ) 148 நிகர இருத்தல் அல்லது அதற்குக் குறைந்த தொகையான கோதுமை மாவைப் பாவனைக்காகவோ உட்கொள்வதற்காகவோ விற்றல் சில்லறை விற்பனையாகக் கருதப்படும் ;

(இ) கோதுமை மா என்னுமிடத்து கோதுமை மாவுடன் சோளம் மாவும் கலக்கப்பட்டதும் அடங்குமென்று ஆஞ்ஞையிடுகின்றேன்.

(5) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் எவராவது கோதுமை மாவுடன் சோளம் மா அல்லாத இதர பொருட்களுடன் கலந்து விற்றல் கூடாதென ஆஞ்ஞையிடுகின்றேன்.

(6) நூற்றுக்குப் பத்துச்சத விகிதத்திற்குக் கூடுதலாகச் சோளம் மா கலந்து கோதுமை மாவை எவரும் விற்கக்கூடாதென ஆஞ்ஞையிடுகின்றேன்.

(7) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் நிர்ணயிக்கும் பகுதிகளில் கோதுமை மாவைத் தம்வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது அல்லது எவ்வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ் வாகனத்தில் தகுந்த ஒரு கொள்கலத்தில் உள்ள கோதுமை மாவை இக்கட்டளையால் நிர்ணயிக்கப்பட்ட ஆகக்கூடிய விலையில் ஒரு அங்குலத்திற்குக் குறையாத உயரத்தைக் கொண்ட எண்களில் விலைக்குறிப்பு அட்டைகளில் அல்லது விளம்பரப் பலகையில் பொருத்தப்பெற்றுப் பாவனையாளருக்குக் கோதுமை மாவும் ஆகக் கூடிய விலைகளும் நன்றாகத் தெரியக் கூடியதாக அக் கொள்கலத்துடன் இணைத்துப் பகிரங்க பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகின்றேன்.

(8) இக்கட்டளையின் நோக்கத்திற்காக "இருத்தல்" அல்லது "இரு" என்பது அவோர்டுபோஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்படுமென ஆஞ்ஞையிடுகின்றேன்.

(9) கோதுமை மாவை விற்குமிடத்து அதைச் சுற்றிக் கொடுக்கும் அல்லது கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின் அவைகளின் விலையும் குறிப்பிட்ட விலைகளில் அடங்குமென ஆஞ்ஞையிடுகின்றேன்.

(10) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்ட எல்லைக்குள் கோதுமை மாவை மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்கும் ஒவ்வொரு வியாபாரியும் வாங்குவோர் கேட்கும் இடத்து அன்னாருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிடும் பற்றுச் சீட்டொன்று வழங்கப்பட வேண்டுமென்று ஆஞ்ஞையிடுகின்றேன் :

(அ) விற்பனை நடந்த திகதி ;

(ஆ) விற்கப்பட்ட கோதுமை மாவின் தொகை (நிறை) ;

(இ) விற்கப்பட்ட கோதுமை மாவின் தொகைக்குக் கொடுக்கப்பட்ட விலை ;

(ஈ) விற்பனையின் தன்மை அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா என்பது.

1973 ம் ஆண்டு மாசி மாதம் 15 ந் திகதி மு. ப. 9.45 மணிக்குத் திருகோணமலையில் ஒப்பமிடப்பட்டது.

கே. கே. ஓ. ஈபட்,
உதவி (உணவு) விலைக்கட்டுப்பாட்டதிகாரி,
திருகோணமலை மாவட்டம்.

**முதலாம் அட்டவணை**

| | பத்தி 1<br>பகுதிகள் | பத்தி 2<br>கோதுமை மாவின் 150 இருத்தல் மொத்த நிறைக்குக் குறையாத ஆகக்கூடிய கட்டுப்பாட்டு மொத்த விலை<br>ரூ. ச. |
|---|---|---|
| 1. | திருகோணமலைப் பிராந்திய உதவி அரசாங்க அதிபரின் பிரிவில் அடங்கிய திருகோணமலைப் பட்டணமும் குடாக்கரைப் பகுதிகளும் .. .. | 57 17 |
| 2. | கந்தளாய் காரியாதிகாரியின் பகுதி .. | 57 60 |
| 3. | கிண்ணியா காரியாதிகாரியின் பகுதி .. | 57 40 |
| 4. | தம்பலகாமம் பிராந்திய உதவி அரசாங்க அதிபரின் பிரிவிலடங்கிய தம்பலகாமம் தெற்கு, தம்பலகாமம் வடக்கு .. .. .. | 57 44 |
| 5. | கட்டுக்குளம்பற்று கிழக்குக் காரியாதிகாரியின் பகுதியும் கட்டுக்குளம்பற்று மேற்கு பிராந்திய உதவி அதிசாங்க அதிபரின் பகுதியும் .. | 57 70 |
| 6. | மூதூர், சேருவில காரியாதிகாரிகளின் பகுதிகள் .. | 57 79 |

**குறிப்பு.**—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட உணவுப் பொருட்களை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகள் அல்ல. இவை **ஆகக்கூடிய** விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருட்களை விற்றலாகாது.

**இரண்டாம் அட்டவணை**

| | பத்தி 1<br>பகுதிகள் | பத்தி 2<br>கோதுமைமா நிகர இருத்தல் ஒன்றின் ஆகக் கூடிய கட்டுப் பாட்டுச் சில் லறை விலை<br>ரூ. ச. |
|---|---|---|
| 1. | திருகோணமலை பிராந்திய உதவி அரசாங்க அதிபரின் பிரிவில் அடங்கிய திருகோணமலை நகரசபைப் பகுதியும் ; கிராம சேவையாளர் பகுதிகளான சாம்பல்தீவு, உப்புவெளி, வெள்ளைமணல், சீனக்குடா ; தம்பலகாம பிராந்திய உதவி அரசாங்க அதிபரின் பிரிவிலடங்கிய தம்பலகமம் வடக்கு, தம்பலகமம் தெற்கு ஆகிய கந்தளாய் காரியாதிகாரியின் பிரிவிலடங்கிய கந்தளாய் ; கிண்ணியா காரியாதிகாரியின் பிரிவிலடங்கிய பெரிய கிண்ணியா, சின்னக்கிண்ணியா கிழக்கும் மேற்கும், குறிஞ்சாக்கேணி .. .. | 0 40 |
| 2. | கட்டுக்குளம்பற்று மேற்கு பிராந்திய உதவி அரசாங்க அதிபரின் பிரிவிலடங்கிய பனிக்கட்டிமுறிப்பு, கோமரன்கடவல, கல்கடவல, மதவாச்சி ; கட்டுக்குளம்பற்று கிழக்கு காரியாதிகாரியின் பிரிவிலடங்கிய கும்புறுபிட்டி, நிலாவெளி, குச்சவெளி ; மூதூர் காரியாதிகாரியின் பிரிவிலடங்கிய மல்லிகைத்தீவு, தோப்பூர், பள்ளிக்குடியிருப்பு, சம்பூர், கட்டைபறிச்சான், கூனித்தீவு, மூதூர் (முஸ்லிம்) மூதூர் (தமிழ்) ; சேருவில காரியாதிகாரியின் பிரிவிலடங்கிய ஈச்சிலம்பற்றை ; மூதூர் காரியாதிகாரியின் பிரிவிலடங்கிய மேன்காமம், கிளிவெட்டி .. .. .. | 0 41 |
| 3. | சேருவில காரியாதிகாரியின் பிரிவிலடங்கிய ஈச்சிலம்பற்றைக் கிராம சேவையாளரின் பகுதிகளான வெருகல் முகத்துவாரம் .. .. | 0 42 |

**குறிப்பு.**—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட உணவுப் பொருட்களை விற்க வேண்டுமென விதிக்கப்பட்ட விலைகள் அல்ல. இவை **ஆகக்கூடிய** விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருட்களை விற்றலாகாது.

3—31/1—02.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 49

உணவு விலைக் கட்டளை இல. தி/விக/5

**சுத்திகரிக்கப்பட்ட வெள்ளைச் சீனி**

**விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்**

*கட்டளை*

173 ம் அத்தியாயமான விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவுடன் வாசிக்கப்பட்ட 3(2) ம் பிரிவினால் உதவி (உணவு) விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு, திருகோணமலை பரிபாலன மாவட்டத்தின் உதவி (உணவு) விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி ஹியூ கொல்மன் ஒரிலடன் ஈபட் ஆகிய நான் இக்கட்டளையால் 1967 ம் ஆண்டு மார்கழி மாதம் 3ம் திகதி வெளியான 14,777/5 ம் இலக்கம் கொண்ட இலங்கை அரசாங்க அதிவிசேட வர்த்தமான பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 1967 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 24 ந் திகதியும் தி/8/67 இலக்கமும் கொண்ட உணவு விலைக்கட்டளையை உடனடியாக நீக்கி விடுகின்றேன்.

1973 ம் ஆண்டு பெப்புருவரி மாதம் 15 ந் திகதி திருகோணமலையில் கையொப்பமிடப்பட்டது.

கே. கே. ஓ. ஈபட்,
உதவி (உணவு) விலைக்கட்டுப்பர்ட்டதிகாரி,
திருகோணமலை பரிபாலன மாவட்டம்.

3–31/2—02.03.73 ம் திகதிய வர்த்தமானி இல. 49

---

உணவு விலைக்கட்டளை இலக்கம் தி/வி.க./4

**பாண்**

**விலைக்கட்டளைச் சட்டம்**

*விலைக் கட்டளை*

173 ம் அத்தியாயமான விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3(2) ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 4ம் பிரிவினால் உத்வி உணவு விலைக் கட்டுப்பாட்டதிகாரிக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு திருக்கோணமலைப் பரிபாலன மாவட்டத்தின் உதவி உணவு விலைக்கட்டுப்பாட்டதிகாரி கியு கொல்மன் ஒரில்டன் ஈபட் ஆகிய நான் இக்கட்டளையால் —

(1) 1967 ம் ஆண்டு மார்கழி மாதம் 3 ம் திகதி வெளியான 14,775/5 ஆம் இலக்க அதிபிரத்தியேக அரசாங்க வர்த்தமானியிற் பிரசுரமான 1967 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 24 ம் திகதியைக் கொண்ட தி/7/67 ம் இலக்கக் கட்டளையை உடனடியாக எடுத்து விடுகின்றேன்.

(2) 8 அவுண்ஸ் நிறையைக் கொண்ட ஒரு பாணையோ 16 அவுண்ஸ் நிறையைக் கொண்ட ஒரு பாணையோ எவ்விடத்திலாவது விற்குமிடத்து இவ்வட்டவணையின் இரண்டாம் 3 ம் பத்திகளில் குறிப்பிட்ட விலைகளையே 1 ம் பத்தியால் விபரிக்கப்பட்டிருக்கும் இடப்பரப்பில் விற்கக்கூடிய ஆகக் கூடிய விலையாக்வும் விதிக்கின்றேன்.

(3) 8 அவுண்ஸ்சிற்கு மேலான நிறையைக் கொண்ட ஒரு பாண் துண்டையோ 8 அவுன்சிற்கு மேலான நிறையைக் கொண்ட ஒரு பாணின் ஒரு பகுதியையோ எவ்விடத்திலாவது விற்குமிடத்து 16 அவுன்சு பாணுக்குக் கணக்கிடப்பட்ட ஆகக்கூடிய விலையின் விகிதத்திற்கேற்ப குறிக்க வேண்டுமென இக்கட்டளையால் ஆஞ்ஞையிடுகின்றேன்.

(4) இக்கட்டளையின் நோக்கத்திற்காக 8 அவுண்ஸ் நிறையோ 8 அவுண்சிற்குக் கூடாத ஒரு நிறையைக் கொண்ட ஒரு பகுதியையோ எவ்விடத்திலாவது 8 அவுண்ஸ் நிறையைக் கொண்ட பாணின் விலையின்படி கணக்கிடப்பட்ட இவ்விலைக்குக் கூடுதலாக அவவிடப்பரப்பில் விற்றல் ஆகாதென ஆஞ்ஞையிடுகின்றேன்.

(5) இக்கட்டளையின் நோக்கத்திற்காகக் குறிப்பிட்டுள்ள ஆகக்கூடிய விலைகளில் அவ்வாறு விதிக்கப்பட்டுள்ள பொருட்களைச் சுற்றிக் கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகப்படுத்தப்படின் அதன் விலையும் அடங்கவேண்டுமென ஆஞ்ஞையிடுகின்றேன்.

(6) இக்கட்டளையில் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் பாணைத் தம் வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்திற்கு விதிக்கப்பட்டுள்ள பாணின் ஆகக் கூடிய விலையைக் குறிக்கும் விளம்பரமொன்றை மக்களின் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகின்றேன்.

(7) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள இடப்பரப்பில் பாண் விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச்சீட்டு ஒன்றைக் கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகின்றேன் :—

(அ) விற்பனை நடத்த திகதி ;

(ஆ) விற்ற பாணின் விபரம் ;

(இ) விற்ற பாணின் தொகையும் ;

(ஈ) விற்ற பாணிற்குக் கொடுக்கப்பட்ட விலையும்.

(8) இக்கட்டளையின் நோக்கத்திற்காக "அவுண்ஸ்" அல்லது "அவு." என்பது அவோர்டுபோசு எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்படும் என்றும் ஆஞ்ஞையிடுகின்றேன்.

1973 ம் ஆண்டு மாசி மாதம் 15 திகதி மு.ப. 9.30 மணிக்குத் திருக்கோணமலையில ஒப்பமிடப்பட்டது.

கே. கே. ஓ. ஈபட்,
உதவி (உணவு) விலைக்கட்டுப்பாட்டதிகாரி,
திருக்கோணமலை மாவட்டம்.

**அட்டவணை**

| | பத்தி 1 | பத்தி 2 | பத்தி 3 |
|---|---|---|---|
| | இடப்பரப்பு | 8 அவுன்சுக்குக் கூடுதலான நிறையுள்ள பாணின் ஆகக் கூடியவிலை (16 அவுண்ஸ்) | 8 அவுன்சும் அதற்குக் குறைந்த நிறையுள்ள பாணின் ஆகக் கூடிய விலை (8 அவுண்ஸ்) |
| | | ரூ. ச. | ரூ. ச. |
| 1. | திருகோணமலை பிராந்திய உதவி அரசாங்க அதிபரின் பிரிவிலடங்கிய திருகோணமலை நகரசபைப் பகுதியும் கிராமசேவையாளர் பகுதியான சாம்பல்தீவு, உப்புவெளி, வெள்ளை மணல், சீனக்குடா .. | 0 42 .. | 0 21 |
| 2. | கட்டுகுளம்பற்று மேற்குப் பிராந்திய உதவி அரசாங்க அதிபரின் பிரிவிலடங்கிய பனிக்கட்டி முறிப்பு, கோமரன்கடவல, கல்கடவல, மதவாச்சி; கட்டுக்குளம் பற்று கிழக்கு காரியாதிகாரியின் பிரிவிலடங்கிய கும்புறுபிட்டி, நிலாவெளி; கந்தளாய் காரியாதிகாரியின் பிரிவிலடங்கிய கந்தளாய் ; தம்பலகாமம் பிராந்திய உதவி அரசாங்க அதிபரின் பிரிவிலடங்கிய தம்பலகாமம் வடக்கும் தெற்கும் ; கிண்ணியா காரியாதிகாரியின் பிரிவைச் சேர்ந்த பெரிய கிண்ணியா, சின்னக் கிண்ணியா கிழக்கும் மேற்கும், குறிஞ்சாக்கேணி ; மூதூர் காரியாதிகாரியின் பிரிவிலடங்கிய மல்லிகைத்தீவு, தோப்பூர், பள்ளிக்குடியிருப்பு, சம்பூர், கட்டை பறிச்சான், கூனித்தீவு, மூதூர் (தமிழ்) மூதூர் (முஸ்லீம்) | 0 44 .. | 0 22 |
| 3. | கட்டுக்குளம்பற்று (கிழக்கு) காரியாதிகாரியின் பிரிவிலடங்கிய திரியாய், குச்சவெளி ; சேருவில காரியாதிகாரியின் பிரிவிலடங்கிய ஈச்சிலம்பற்றை ; மூதூர் காரியாதிகாரியின் பிரிவிலடங்கிய மேன்காமம், கிளிவெட்டி ஆகிய கிராம சேவையாளரின் பகுதிகள் .. | 0 45 .. | 0 23 |

**குறிப்பு.**—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட உணவுப் பொருட்களை விற்க வேண்டுமென விதிக்கப்பட்ட விலைகள் அல்ல. இவை **ஆகக்கூடிய** விலைகளாகும். இவவிலைகளுக்கு மேலாக அப்பொருட்களை விற்றலாகாது.

3–31/3—02.03.73 ம் திகதிய வர்த்தமானி இல. 49

விலைக் கட்டளை இல. 2. **கோதுமை மா**

**விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்**

கட்டளை

விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (அத்தியாயம் 173) 4 ம் பிரிவை அதன் 3 (2) உட்பிரிவோடு சேர்த்து வாசிக்குமிடத்து என்மேற் பாரிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு களுத்துறை பரிபாலன மாவட்ட உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு, பலவிதமான பொருட்கள்), கால்லகே ஆரியபால த சில்வா ஆகிய நான் இக்கட்டளையால்—

(1) 1967 ம் ஆண்டு நொவம்பர் 25 ந் திகதி கே. எல். 119 என இலக்கமிடப்பட்டு 14,776/13 ம் இலக்கம் கொண்ட 1967 ம் ஆண்டு நொவம்பர் மாதம் 29 ந் திகதி வெளிவந்த விசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விலைக்கட்டுப்பாட்டுக் கட்டளையை இப்போதிருந்தே உடனடியாக நீக்கிவிடுகிறேன்.

(2) உடனடியாக இதனோடிணைக்கப்பட்டிருக்கும் முதலாம் அட்டவணையில் 2 ம் பகுதியில் குறிக்கப்பட்டிருக்கும் விலைகள் தான் முறையே 148 நிகர இருத்தல் நிறையைக் கொண்ட கோதுமை மாவின் ஆகக்கூடிய மொத்த விலைகளாகவும் இவ்விலைக்கு மேலாக அதே அட்டவணையில் 1 ம் பகுதியில் குறிக்கப்பட்டிருக்கும் எல்லைக்குள் கோதுமை மா விற்கக் கூடாதென்றும் நியமிக்கிறேன்.

(3) உடனடியாக இதனோடிணைக்கப்பட்டிருக்கும் 2 ம் அட்டவணையில் 2 ம் பகுதியில் குறிக்கப்பட்டிருக்கும் விலைகள் தான் அவற்றிற்கு நேரே 1 ம் பகுதியில் குறிக்கப்பட்ட எல்லைக்குள் ஒரு நிகர இருத்தல் கோதுமை மாவின் ஆகக்கூடிய சில்லறை விலை என்றும் அதற்கு மேலதிகமாக கோதுமை மா அவ்விடங்களில் சில்லறையாக விற்கக்கூடாதென்றும் நியமிக்கிறேன்.

(4) இக்கட்டளையின் நோக்கத்திற்காக—

(அ) எத்தொகையான எவ்வித கோதுமை மாவையோ திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது 148 நிகர இருத்தல் நிறையைக் கொண்ட அல்லது அதற்குக் கூடிய தொகையையோ ஒரு முறையில் விற்பது மொத்த விற்பனையாகவே கருதப்படுமென்றும் ;

(ஆ) 148 நிகர இருத்தல் நிறைக்குக் குறைந்த கோதுமை மாவை உட்கொள்வதற்கோ உபயோகிப்பதற்கோ விற்றல் மறு விற்பனையாகவே கருதப்படுமென்றும் ;

(இ) "கோதுமை மா" என்பது கோதுமை மாவுடன் எப்படியாவது கலந்த சோளம் மாவையும் குறிக்குமென்று ஆஞ்ஞையிடுகிறேன்.

(5) சோளம் மாவைத் தவிர்ந்த வேறு எப்பொருளுடனும் கலந்த கோதுமை மாவை விற்கலாகாதென ஆஞ்ஞையிடுகிறேன்.

(6) கோதுமை மாவையும் சோளம் மாவையும் கலந்து விற்குமிடத்து, சோளம் மாவின் நிறை பத்து வீதத்திற்குக் கூடியதாக இருக்கக் கூடாதென ஆஞ்ஞாபிக்கிறேன்.

(7) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள இடத்தில் குறிப்பிட்டுள்ள விலைகளில் அவ்வாறு விற்கப்படும் மாவைச் சுற்றிக் கொடுக்கும் உறை அல்லது வைத்துக் கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையும் அடங்க வேண்டுமென ஆஞ்ஞாபிக்கிறேன்.

(8) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் கோதுமை மாவைத் தம்வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது வைத்திருக்கும் ஒதுவொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் தகுந்தவொரு கொள்கலத்திற் குறிப்பிட்ட கோதுமை மாவில் ஒரு சிறு பகுதியையும் இக்கட்டளையால் கோதுமை மாவிற்கு விதிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய விலைகளையும் வாங்குபவரால் நன்குக பார்க்கக்கூடியவாறு இக்கொள்கலத்தில் இணைத்து வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞாபிக்கிறேன்.

(9) இக்கட்டளையால் களுத்துறை மாநகர சபை எல்லைக்குள் கோதுமை மாவை மொத்தமாகவோ சில்லறையாகவோ விற்கும் ஒவ்வொரு வியாபாரியும், கோதுமை மாவை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச்சீட்டு ஒன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த திகதி ;

(ஆ) விற்ற கோதுமை மாவின் நிறை ;

(இ) விற்ற கோதுமை மாவிற்குச் செலுத்தப்பட்ட விலை ;

(ஈ) விற்பனையின் தன்மை, அதாவது மொத்தமாகவா சில்லறையாகவா விற்கப்பட்டது.

(10) இக்கட்டளையின் நோக்கத்திற்காக "இருத்தல்" அல்லது "இரு" என்பது அவோர்டுபாக நிறுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்படுமென்றும் ஆஞ்ஞாபிக்கிறேன்.

1973 ம் ஆண்டு பெப்ரவாரி மாதம் 1 ந் திகதி காலை 8.00 மணிக்கு களுத்துறைக் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

ஜீ. ஏ. த சில்வா,
உதவி உணவு விலைக்கட்டுப்பாட்டதிகாரி,
(உணவு, பலவிதமான பொருட்கள்),
களுத்துறை மாவட்டம்.

**முதலாம் அட்டவணை**

| பத்தி 1 | | பத்தி 11 |
|---|---|---|
| காரியாதிகாரியின் பிரிவு | எல்லைகள் | மொத்த அந்தர் ஒன்றிற்கு ஆகக் கூடிய மொத்த விற்பனை விலை ரூ. ச. |
| ரைகம் கோரளை (கிழக்கு) .. .. .. | இங்கிரிய .. .. | 55 99 |
| | ஹொரான .. .. | 55 78 |
| | மதுராவல .. .. | 55 92 |
| | மில்லேவா .. .. | 55 87 |
| | கல்பாத்த .. .. | 55 96 |
| ரைகம் கோரளை (மேற்கு) .. .. .. | பண்டாரகம .. .. | 55 75 |
| | மத்தெவத்த–ஹல்தொட்ட .. | 55 85 |
| பாணந்துரை, தொட்டமுனை .. .. .. | பாணந்துறை .. .. | 55 86 |
| | அலுபோமுல்ல .. .. | 55 64 |
| | தந்திரிமுல்ல .. .. | 55 59 |

| பத்தி 1 காரியாதிகாரியின் பிரிவு | எல்லைகள் | பத்தி 2 மொத்த அந்தர் ஒன்றிற்கு ஆகக் கூடிய மொத்த விற்பனை விலை ரூ. ச. |
|---|---|---|
| களுத்துறை, தொட்டமுனே (வடக்கு) .. .. .. | களுத்துறை .. .. | 55 78 |
| | வஸ்கடுவ .. .. | 55 78 |
| | வாத்துவை .. .. | 55 70 |
| களுத்துறை, தொட்டமுனே (தெற்கு) .. .. .. | அனுத்கம .. .. | 56 04 |
| | பேருவலே-தர்காடவுன் .. | 55 96 |
| | பய்யாகல-மக்கூன் .. .. | 55 92 |
| பஸ்துன் கோரளே (மேற்கு) .. .. .. | மதுகம .. .. | 56 06 |
| | வெலிபென்ன .. .. | 56 11 |
| | சபுகஹவத்த .. .. | 55 96 |
| | நேபொட .. .. | 56 06 |
| பஸ்துன் கோரளே (தெற்கு) .. .. .. | இத்தபான .. .. | 56 13 |
| | மீகஹதென்ன .. .. | 56 24 |
| கங்கபட பத்து .. .. .. .. | புலத்சிங்ஹல .. .. | 55 94 |
| பஸ்துன் கோரளே (கிழக்கு) .. .. .. | அகலவத்த .. .. | 56 06 |
| | லத்பந்துர .. .. | 56 16 |
| | மஹகம .. .. | 56 18 |

**இரண்டாம் அட்டவணை**

| பத்தி 1 கிராம சேவகரின் பிரிவு இல. | காரியாதிகாரியின் பிரிவு | பத்தி 2 நிகர இருத்தல் ஒன்றின் ஆகக்கூடிய சில்லறை விலை ரூ. ச. |
|---|---|---|
| 604–642 ; 648, 650, 650எ .. .. | ரைகம் கோரளே (கிழக்கு) .. .. .. | 0 39 |
| 643–647 ; 649, 651–669 .. .. | ரைகம் கோரளே (மேற்கு) .. .. .. | 0 39 |
| 670–697எ ; 699, 702 .. .. | பாணந்துறை, தொட்டமுனே .. .. .. | 0 39 |
| 698, 700, 701 ; 703–732 .. .. | களுத்துறை, தொட்டமுனே (வடக்கு) .. .. | 0 39 |
| 733–770 .. .. .. | களுத்துறை, தொட்டமுனே (தெற்கு) .. .. | 0 39 |
| 771–776 ; 792–810 .. .. | பஸ்துன் கோரளே (மேற்கு) .. .. .. | 0 39½ |
| 777–791 ; 842, 843, 843எ, 844எ ; 848–850 .. | பஸ்துன் கோரளே (தெற்கு) .. .. | 0 39½ |
| 811–825 .. | கங்கபொட பத்து .. .. .. | 0 39½ |
| 826–841 ; 844 ; 845–847 .. .. | பஸ்துன் கோரளே (கிழக்கு) .. .. .. | 0 39½ |

**குறிப்பு.**—(1) இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருளை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல ; இவை உச்ச விலைகளாகும். இவ்விலைக்கு மேலாக அப்பொருள்களை விற்றலாகாது.

(2) 148 நிகர இருத்தலுக்குக் குறைந்து அல்லது கூடிய தொகையான கோதுமை மாவை மொத்தமாக விற்கும் பொழுது வழமைபோல் 148 நிகர இருத்தல் ஒன்றின் அளவு விகிதத்திற்கேற்பக் கணக்கிடப்பட்ட விலையாக அமைய வேண்டும்.

3–1003/1—2.03.1973 ந் திகதிய வர்த்தமானி இல. 49

---

விலைக்கட்டளை இல. கே. எல். 3. **பாண்**

## விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தில் (அத்தியாயம் 173) 4 ம் பிரிவை அதன் 3 (2) உட்பிரிவோடு சேர்த்து வாசிக்குமிடத்து என்மேற் பாரிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு களுத்துறை பரிபாலன மாவட்டம் உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு, பலவிதமான பொருட்கள்), காலலகே ஆரியபால த சில்வா ஆகிய நான் இக்கட்டளையால்—

(1) 1971 ம் ஆண்டு நொவம்பர் மாதம் 29 ந் திகதி வெளியான 14,776/3 ம் இலக்க அரசாங்க அதிவிசேட கசெற்றில் பிரசுரமான 1971 ம் ஆண்டு நொவம்பர் மாதம் 25 ந் திகதியைக் கொண்ட கே. எல். 120 ம் இலக்க விலைக் கட்டளையை இப்போதிருந்தே உடனடியாக நீக்கிவிடுகிறேன்.

(2) இவ்வட்டவணையில் 1 ம் பகுதியில் எதிராகக் குறிக்கப்பட்டுள்ள இடப்பரப்பிலே முறையே 16 அவுன்ஸ் நிறையுள்ள அல்லது 8 அவுன்ஸ் நிறையுள்ள பாணின் பகுதிகளின் விலைகள் இதனோடு இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் 2 ம், 3 ம் பகுதிகளில் குறிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய விலைகள் என விதிக்கிறேன்.

(3) குறித்த இடத்திற்கு இக்கட்டளையின் நோக்கத்திற்காக 8 அவுன்ஸ் நிறைக்குக் கூடுதலான பாணின் ஒரு பகுதியையோ எவ்விடத்திலாவது, 16 அவுன்ஸ் நிறையைக் கொண்ட பாணின் விலையின்படி கணக்கிடப்பட்ட விலைக்குக் கூடுதலாக இவ்விடப்பரப்பில் விற்கலாகாது என ஆஞ்ஞையிடுகிறேன்.

(4) குறித்த இடத்திற்கு இக்கட்டளையின் நோக்கத்திற்காக 8 அவுன்ஸ் நிறையை அல்லது 8 அவுன்ஸுக்கு கூடாத நிறையைக் கொண்ட பாணின் ஒரு பகுதியையோ எவ்விடத்திலாவது, 8 அவுன்ஸ் நிறையைக் கொண்ட பாணின் விலையின் படி கணக்கிடப்பட்ட விலைக்குக் கூடுதலாக அவ்விடப்பரப்பில் விற்றலாகாது என ஆஞ்ஞையிடுகிறேன்.

(5) இக்கட்டளையின் நோக்கத்திற்காகக் குறிப்பிட்டுள்ள ஆகக்கூடிய விலைகளில் அவ்வாறு விற்கப்படும் பாணினைச் சுற்றிக் கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையும் அடங்கவேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(6) இக்கட்டளையின் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் பாணைத் தம்வசத்தில் அல்லது தமது கட்டுப் பாட்டில் எவ்விடத்திலாவது வைத்திருப்பவர் அவ்விடத்திற்கு விதிக்கப்பட்டுள்ள பாணின் ஆகக்கூடிய விலையைக் குறிக்கும் விளம்பரம் ஒன்றை மக்களின் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(7) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பினும் பாணைத் தன்வசம் பாண் விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டு பற்றுச்சீட்டு ஒன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த திகதி ;

(ஆ) விற்ற பாணின் விபரம் ;

(இ) விற்ற பாணின் தொகையும் ;

(ஈ) விற்ற பாணிற்குக் கொடுக்கப்பட்ட விலையும்.

(8) இக்கட்டளையின் நோக்கத்துக்காக " அவுன்ஸ் " அல்லது " அவு " என்பது அவோர்டுபோஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்படுமென்றும் ஆஞ்ஞையிடுகிறேன்.

1973 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 1 ந் திகதியன்று மு. ப. 8.00 மணிக்குக் களுத்துறைக் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

ஜீ. எ. த சில்வா,
உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி,
(உணவு, பலவிதமான பொருட்கள்),
களுத்துறை மாவட்டம்.

அட்டவணை

| பத்தி 1 | | பத்தி 2 | பத்தி 3 |
|---|---|---|---|
| கி. சே. பிரிவு இல. | காரியாதிகாரியின் பிரிவு | 8 அவு. கூடுதலான நிறையுள்ள பாணின் ஆகக்கூடிய விலை<br>ரூ. ச. | 8 அவு. நிறையுள்ள பாணின் ஆகக்கூடிய விலை<br>ரூ. ச. |
| 604–642, 648, 650, 650 A .. | ரைகம் கோரளை (கிழக்கு) .. | 0 39 (16 அவுன்சுக்கு) .. | 0 20 (8 அவுன்சுக்கு) |
| 643–647, 649, 651–669 .. | ரைகம் கோறளை (மேற்கு) .. | | |
| 670–697A, 699, 702 .. | பாணந்துறை தொட்டமுனை .. | | |
| 698, 700, 701, 703–732 .. | களுத்துறை தொட்டமுனை (வடக்கு) | | |
| 733–770 .. .. | களுத்துறை தொட்டமுனை (தெற்கு) | | |
| 771–776, 792–810 .. | பஸ்துன் கோரளை (மேற்கு) .. | 0 40 (16 அவுன்சுக்கு) .. | 0 20 (8 அவுன்சுக்கு) |
| 777–791, 842, 843, 843A, 844A, 848–850 .. .. | பஸ்துன் கோரளை (தெற்கு) .. | | |
| 811–825 .. .. | கங்கபொட பத்து .. | | |
| 826–841, 844; 845–847 .. | பஸ்துன் கோரளை (கிழக்கு) .. | | |

**குறிப்பு.**—இவ்விலைகள் மேலே சொலலப்பட்ட பொருட்களை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல. இவை ஆகக்கூடிய விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருட்களை விற்றலாகாது.

3-1003/2—02.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 49

---

உணவு விலைக் கட்டளை இல. : எப். சி. 5/13/73. **கோதுமை மா**

**விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்**

*கட்டளை*

1950 ம் ஆண்டின், 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 (2) ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்குமிடத்து எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு அம்பாறை பரிபாலன மாவட்ட உதவி உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரியான றத்துக்கமகே சிறில் அந்தோனி பேர்ணண்டோ ஆகிய நான் இக்கட்டளையால் :—

(1) 1968 ம், ஆண்டு சித்திரை மாதம் 11 ந் திகதி வெளியிடப்பட்ட 14,797/2 என்ற இலக்கத்தைக்கொண்ட அதிவிசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையிற் பிரசுரமான 1968 ம் ஆண்டு சித்திரை 11 ந் திகதியைக்கொண்ட எப். சி. 5/13/68 ம் இலக்கக் கட்டளையை உடனடியாக நீக்கிவிடுகிறேன்.

(2) இதனோடிருக்கும் முதலாம் அட்டவணையின் இரண்டாம் பந்தியில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே நிகர 148 இருத்தல் மொத்த வியாபாரி ஒருவர் விற்கும் ஆகக்கூடிய விலையாக உடனடியாக நடைமுறையில் வருமாறு விதிக்கின்றேன். இவ்விலைகளுக்குக் கூடுதலாக குறிப்பிட்ட அட்டவணையின் முதலாம் பந்தியில் விபரிக்கப்பட்ட எல்லைகளுக்குள் கோதுமை மாவை விற்கலாகாது.

(3) இதனோடிருக்கும் இரண்டாம் அட்டவணையில் 2 ம் பந்தியில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே நிகர இருத்தல் ஒன்றை சில்லறை வியாபாரி ஒருவர் பாவனையாளர் ஒருவருக்கு விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலையாக உடனடியாக நடைமுறையில் வருமாறு விதிக்கின்றேன். இவ்விலைகளுக்கு கூடுதலாக குறிப்பிட்ட அட்டவணையின் 1 ம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள எல்லைகளுள் கோதுமை மாவை விற்கலாகாது.

(4) இக்கட்டளையின் நோக்கத்திற்காக—

(அ) எத்தொகையான எவ்வித கோதுமை மாவையோ திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது 148 நிகர இருத்தல் நிறையைக் கொண்ட அல்லது அதற்குக்கூடிய தொகையையோ ஒரு முறையில் விற்பது மொத்த விற்பனையாகவே கருதப்படும் என்றும் ;

(ஆ) 148 நிகர இருத்தல் நிறைக்குக் குறைந்த கோதுமை மாவை உள்கொள்வதற்கோ உபயோகிப்பதற்கோ விற்றல் மறுவிற்பனையாகவே கருதப்படுமென்றும் ;

(இ) " கோதுமைமா " என்பது கோதுமைமாவுடன் எப்படியாவது கலந்த சோளம்மாவையும் குறிக்குமென்று ஆஞ்ஞாபிக்கின்றேன்.

(5) சோளம் மாவைத் தவிர்த்த வேறு எப்பொருளுடனும் கலந்த கோதுமைமாவை விற்றல் ஆகாதென ஆஞ்ஞாபிக்கின்றேன்.

(6) கோதுமை மாவையும் சோளம் மாவையும் கலந்து விற்கும் இடத்து, சோளம்மாவின் நிறை பத்து வீதத்துக்குப் கூடியதாக இருக்கக் கூடாதென ஆஞ்ஞாபிக்கின்றேன்.

(7) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள இடத்தில், குறிப்பிட்டுள்ள விலைகளில் அவ்வாறு விற்கப்படும் மாவைச் சுற்றிக் கொடுக்கும் உறை அல்லது வைத்துக் கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகிப்படின் அதன் விலையும் அடங்க வேண்டுமென ஆஞ்ஞாபிக்கின்றேன்.

(8) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் நிர்ணயிக்கப்பட்ட ஒவ்வொரு இடத்திலும் தன்னிடத்தில் அல்லது தனது கட்டுப்பாட்டினுள் கோதுமை மாவை எவ்விடத்திலாவது அல்லது எத்தகைய வாகனத்தினுள்ளாவது வைத்திருக்கும் ஒவ்வொரு விற்பனையாளரும் இவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தினுள் ஒரு தகுந்த கொள்கலத்தினுள் கோதுமைமாவை இட்டு அத்துடன் இக்கட்டளையால் நிர்ணயிக்கப்பட்ட ஆகக்கூடிய விலை எண்களால் குறிப்பிடப்பட்ட ஒரு அங்குலத்துக்கு குறையாத உயரம் உள்ள விலைக்குறிப்பு அட்டைகள் அல்லது விளம்பரப் பலகைகள் என்பனவற்றையும் இணைத்து அக்கோதுமை மாவும் அதன் ஆகக்கூடிய விலையும், அதனை வாங்க வருபவர்களுக்குத் தெளிவாக தெரியும்படி அதனைக் கவனமாக விளம்பரப்படுத்த வேண்டும் என்று ஆணையிடுகிறேன்.

(9) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலை நிர்ணயிக்கப்பட்ட ஒவ்வொரு இடத்திலும் மொத்த விற்பனையாக கோதுமைமாவை விற்கும் ஒவ்வொருவரும், அத்துடன் கோதுமைமாவைச் சில்லறை விற்பனையாக விற்கும் ஒவ்வொருவரும் அதனை வாங்குவோருக்குப் பின்வருவனவற்றைத் தெரியப்படுத்தும் பற்றுச்சீட்டு ஒன்றை அவர்கேட்கும் இடத்துக்கொடுக்க வேண்டுமென்று ஆணையிடுகின்றேன்.

(அ) விற்பனை நடந்த திகதி ;

(ஆ) விற்கப்பட்ட கோதுமை மாவின் தொகை (நிறையில்) ;

(இ) விற்கப்பட்ட கோதுமை மாவிற்குக் கொடுக்கப்பட்ட விலை ;

(ஈ) கோதுமைமாவின் விற்பனை எத்தகையது—அது மொத்த விற்பனையா சில்லறை விற்பனையா என்ற விபரம்.

(10) இக்கட்டளையின் நோக்கத்திற்காக "இருத்தல்", "இரு." என்பது அவோர்டுபோஸ் நிறுத்தல் அளவை முறையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்படுமென்றும் ஆஞ்ஞாபிக்கின்றேன்.

1973 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 17 ந் திகதி காலை 8.30 மணிக்கு அம்பாறை அரசாங்க அதிபர் காரியாலயத்தில் கையொப்பம் இடப்பட்டது.

ஆர். சி. ஏ. சிரீ. பெர்னாண்டோ,
உதவி விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி (உணவு),
அம்பாறை மாவட்டம்.

## முதலாம் அட்டவணை

| | பந்தி 1<br>பகுதிகள் | பந்தி 2<br>மொத்த வியாபாரியின் 148 நிகர இருத்தலின் ஆகக் கூடிய மொத்த விலை<br>ரூ. ச. |
|---|---|---|
| 1. | அம்பாறை நகரம் (உகணை, பறகாகலை, வாவினை, தமனை, பள்ளம்ஓயா, இங்குருனை, பகுதிகள் உள்பட) .. | 58 17 |
| 2. | கோணுகொல்லைப்பகுதி (வக்கியல்லை உள்பட) .. .. .. .. | 58 33 |
| 3. | சென்றல் கேம் பகுதி .. .. .. .. .. | 58 20 |
| 4. | கரவாகப்பற்று நிந்தவூர்பற்றுப்பகுதி .. .. .. .. .. | 57 94 |
| 5. | சம்மாந்துறைப்பற்றுப் பகுதி (அம்பாறை நகர் தவிர) .. .. .. .. | 58 04 |
| 6. | அக்கரைப்பற்றுப் பகுதி .. .. .. .. .. | 58 17 |
| 7. | பாணமைப்பற்றுப் பகுதி .. .. .. .. .. | 58 50 |

## இரண்டாம் அட்டவணை

| | பந்தி 1<br>பகுதிகள் | பந்தி 2<br>நிகர இருத்தல் ஒன்றின் சில்லறை விலை<br>ரூ. ச. |
|---|---|---|
| 1. | அம்பாறை நகரம் (உகனை, பறகாகலை, வாவினை, தமனை, பள்ளம்ஓயா, இங்குருனைப் பகுதிக்கு உள்பட்ட) .. | 0 40½ |
| 2. | கொணுகொல்லைப்பகுதி (வக்கியல்லை உள்பட) .. .. .. .. | 0 40½ |
| 3. | சென்றல் கேம் பகுதி .. .. .. .. .. | 0 40½ |
| 4. | கரவாகுப்பற்று நிந்தவூர்பற்றுப் பகுதி .. .. .. .. .. | 0 40½ |
| 5. | சம்மாந்துறைப் பற்றுப்பகுதி (அம்பாறை நகர் தவிர) .. .. .. .. | 0 40½ |
| 6. | அக்கரைப்பற்றுப்பகுதி .. .. .. .. .. | 0 40½ |
| 7. | பாணமைப்பற்றுப்பகுதி (கூமுனைப் பகுதியைத் தவிர்ந்த) .. .. .. .. | 0 41 |
| 8. | கூமுனைப்பகுதி .. .. .. .. .. | 0 42½ |

**கவனிக்க :** (1) இவ்விலைகள் கோதுமைமா விற்பனைக்காகக் குறிக்கப்பட்ட, நிர்ணயிக்கப்பட்ட விலைகள் அல்ல ; இவைகள் ஆகக்கூடிய விலைகள் இவ்விலைகளுக்கு மேல் விற்பனை செய்யமுடியாது.

2. 148 நியம இருத்தலுக்கு கூடவாகவோ அல்லது குறைவாகவோ மொத்த விற்பனையாக விற்கப்படும் எந்த அளவுக் கோதுமை மாவிற்கும் ஆகிய விலைகள் வழமை போலவே முன் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு 148 நியம இருத்தலுக்குமான ஆகக்கூடிய மொத்த விற்பனை விலைகளில் இருந்து தகவுப்பொருத்தமான கணக்கிட்டுக்கொள்ளப்படும்.

3–200—02.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 49

உணவு விலைக் கட்டளை இல. : எப்சி/5/27/73

பாண்

**1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்**

கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 (2) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 4 ம் பிரிவினால் எனக்கு அளிக்கப் பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு அம்பாறை உதவி விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி (உணவு) ரத்துக்கமகே சிறில் அந்தோனி பெர்னாண்டோ ஆகிய நான் இக்கட்டளையால்—

(1) 1967 ம் ஆண்டு மார்கழி மாதம் 3ந் திகதி வெளியான 14,777/5 ம் இலக்கத்தைக் கொண்ட அதிவிசேட இலங்கை அரசாங்க வர்த்த மானப் பத்திரிகையில் பிரசுரமான 1967 ம் ஆண்டு மார்கழி மாதம் 3 ந் திகதியைக் கொண்ட எப்சி/5/27/67 ம் இலக்க கட்டளையை உடனடியாக நீக்கிவிடுகிறேன்.

(2) இதனோடிருக்கும் அட்டவணையின் 2 ம், 3 ம் பந்திகளில் விபரிக்கப் பட்டிருக்கும் விலையே முறையே 16 அவுன்ஸ், 8 அவுன்ஸ் பாண் களை முறையே 1 ம் பந்தியில் விபரிக்கப்பட்டிருக்கும் எல்லையில் விற்கக்கூடிய ஆகக்கூடிய விலையாகும். இது 1973 ம் ஆண்டு ஜனவரி மாதம் வியாழக்கிழமை 11 ந் திகதி நள்ளிரவு முதல் அமுல் செய்யப்படுமென விதிக்கிறேன்.

(3) 8 அவுன்சுக்கு மேலான நிறையைக் கொண்ட ஒரு பாணையோ அல்லது 8 அவுன்சுக்கு மேலான நிறையைக் கொண்ட ஒரு பாணின் பகுதியையோ எவ்விதத்திலாவது விற்குமிடத்து 16 அவுன்ஸ் பாணுக்கு விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலையின் சராசரி விலையின்படி கணக்கிடப்பட வேண்டுமென ஆணையிடுகிறேன்.

(4) இக்கட்டளையின் நோக்கத்திற்காக 8 அவுன்ஸ் நிறையை அல்லது 8 அவுன்சுக்குக் கூடாத நிறையைக் கொண்ட பாணின் ஒரு பகுதியையோ எவ்விதத்திலாவது 8 அவுன்ஸ் பாணின் விலையின் படி கணக்கிடப்பட்ட விலைக்குக் கூடுதலாக அவ் எல்லையில் விற்கலாகாது என ஆணையிடுகிறேன்.

(5) இக்கட்டளையின் நோக்கத்திற்காக குறிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய விலைகளில் அவ்வாறு விற்கப்படும் பொருளைச் சுற்றிக்கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையும் அடங்கவேண்டும் என ஆணையிடுகிறேன்.

(6) இக்கட்டளையில் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு எல்லையிலும் பாணைத் தம் வசத்தில் அல்லது தமது கட்டுப் பாட்டில் எவ்விதத்திலாவது வைத்திருப்பவர் அவ்விடத்திற்கு விதிக்கப்பட்டுள்ள பாணின் ஆகக்கூடிய விலையைக் குறிக்கும், விளம்பரம் ஒன்றை மக்களின் பார்வைக்கு வைக்கவேண்டுமென ஆணையிடுகிறேன்.

(7) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள எல்லை யில் பாண் விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்கும் இடத்து அன்னாருக்குப் பின்வருவனவற்றை குறிப்பிட்டுப் பற்றுச் சீட்டு ஒன்று கொடுக்கவேண்டுமென ஆணையிடு கிறேன் :

(அ) விற்பனை நடந்த திகதி ;

(ஆ) விற்ற பாணின் விபரம் ;

(இ) விற்ற பாணின் தொகையும் ;

(ஈ) விற்ற பாணிற்கு கொடுக்கப்பட்ட தொகை.

(8) இக்கட்டளையின் நோக்கத்திற்காக " அவுன்ஸ்" அல்லது " அவு. " என்பது அவோர்டுபோஸ் எடுத்தல் அளவை முறையின் பிரமாண இருத்தல் நிறையைக் கருதப்படுமென்றும் ஆணையிடுகிறேன்.

1973 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 17 ந் திகதி 8.30 மணிக்கு அம்பாறை கச்சேரியில் கையொப்பம் இடப்பட்டது.

ஆர். சி. ஏ. பெர்னாண்டோ,
உதவி விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி (உணவு),
அம்பாறை மாவட்டம்

**அட்டவணை**

| | நிரல் 1 | நிரல் 2 | நிரல் 3 |
|---|---|---|---|
| | எல்லை | 8 அவுன்சுக்கு கூடுதலான நிறையுள்ள பாணின் ஆகக்கூடிய விலை ரூ. ச. | 8 அவுன்சும் அதற்குக் குறைந்த நிறையுள்ள பாணின் ஆகக் கூடிய விலை ரூ. ச. |
| 1. | கரவாகுப்பற்று, நிந்தவூர்பற்று சம்மாந்துறைப்பற்று .. | 0 42 .. | 0 21 |
| 2. | அக்கரைப்பற்று, வேவகம்பற்று .. | 0 43 .. | 0 22 |
| 3. | பாணமைப்பற்று .. | 0 44 .. | 0 22 |

**குறிப்பு.**—இங்கு குறிக்கப்பட்டுள்ள குறித்த விலைக்குத்தான் விற்கப்பட வேண்டுமென்று கருதப்படவில்லை. இவைகள்தான் **ஆகக்கூடிய** விலை எனவும் இவற்றுக்கு கூடுதலாக விற்கப்படக்கூடாதெனவும் கொள்ளப் படவேண்டும்.

3—201—02.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 49

---

விலைக்கட்டளை இல.: ஜீ. 3/1973

பாண்

**விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்**

கட்டளை

விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (173 ம் அத்தியாயம்) 3 (2) ம் பிரிவுடன் இணைந்து செயல்படும் 4 ம் பிரிவினால் எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங் களுக்கியைய காலி மாவட்ட உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவும் நானாவிதப் பொருட்களும்) ஹென்றி விஜேதிலக்க ஆகிய நான் இந்தக் கட்டளையால்—

(1) 1967 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 3 ம் திகதியைக் கொண்ட 14,777/5 ம் இலக்க இலங்கை அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் 1967 ம் ஆண்டு திகதியிடப்பட்டதும், ஜீ. 7 ம் இலக்கம் கொண்டதுமான உணவு விலைக் கட்டளையை உடனடியாக ரத்துச் செய் கிறேன்.

(2) இதனோடிருக்கும் அட்டவணையின் 2 ம், 3 ம் பந்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே, 16 அவுன்ஸைக் கொண்ட பாணையோ 8 அவுன்ஸ் நிறையைக் கொண்ட பாணையோ 1 ம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேசத்தில் விற்கக்கூடிய மிக அதிக விலை யாகவும் விதிக்கிறேன்.

(3) இக்கட்டளைக்கமைய 8 அவுன்ஸுக்கு மேலான நிறையைக் கொண்ட ஒரு பாணையோ அல்லது 8 அவுன்ஸுக்கு அதிகமான நிறையைக் கொண்ட ஒரு பாணின் பகுதியையோ குறிப்பிட்ட பிரதேசத்தின் எப்பகுதியிலாவது விற்குமிடத்து 16 அவுன்ஸ் பாணுக்கு விதிக்கப்பட்ட மிக அதிக விலையின் பரிமாண வீதப்படி கணக்கிடப்பட்ட விலைக்கே விற்க வேண்டும் எனவும் நியமிக்கிறேன்.

(4) இக்கட்டளைக்கமைய 8 அவுன்ஸ் நிறையை அல்லது 8 அவுன்ஸுக்கு மேலாகாத நிறையைக் கொண்ட பாணின் ஒரு பகுதியை இப்பிரதேசத்தின் எப்பகுதியிலாவது 8 அவுன்ஸ் பாணின் மிக அதிக விலையின் பரிமாண வீதப்படி கணக்கிடப்பட்ட விலைக்கு மேலாக விற்கக்கூடாது எனவும் உத்தரவிடுகிறேன்.

(5) இக்கட்டளைக்கமைய, விற்கப்படும் பொருளைச் சுற்றிக் கொடுக்கும் உறைகளின் விலையும், பாணின் மிக அதிகவிலையுள் அடங்கும் எனவும் விதிக்கிறேன்.

(6) இக்கட்டளைக்கமைய மிக அதிகவிலை விதிக்கப்பட்டுள்ள எந்தப் பகுதியிலும் தம்வசம் பாண் வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும், விற்பனை நிலையத்தில் அவ்வப்பிரதேசத்திற்கென விதிக்கப்பட்டுள்ள மிக அதிகவிலையை நுகர்வோரின் பார்வைக்காக வைக்க வேண்டுமெனவும் உத்தரவிடுகிறேன்.

(7) இக்கட்டளைக்கமைய மிக அதிக விலைகள் விதிக்கப்பட்டுள்ள பிரதேசத்தில் பாண் விற்பனை செய்யும் ஒவ்வொருவரும், நுகர்வோர் கோருமிடத்து, அன்னாருக்குப் பின்வரும் விபரங்களைக் குறிப்பிடும் பற்றுச்சீட்டு வழங்கவேண்டுமெனவும் உத்தரவிடுகிறேன் :—

(அ) விற்பனை நிகழ்ந்த திகதி ;

(ஆ) விற்ற பாணின் விபரம் ;

(இ) விற்ற பாணின் அளவு (ம்) ;

(ஈ) விற்ற பாணுக்குச் செலுத்தப்பட்ட விலை (யும்).

(8) இக்கட்டளைக்கமைய "அவுன்ஸ்" அல்லது "அவு." என்பது அவோயிர்டியுபொயிஸ் நிறுத்தலளவை முறையின் பிரமாண நிறையாகக் கருதப்படவேண்டும் எனவும் விதிக்கிறேன்.

1973 ம் ஆண்டு ஜனவரி மாதம் 12 ந் திகதி முற்பகல் 10 மணிக்கு காலியில் கையொப்பமிடப்பட்டது.

எச். விஜேதிலக்க,
காலி மாவட்ட உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி,
(உணவும் நானாவிதப் பொருட்களும்).

அட்டவணை

| பத்தி 1 | பத்தி 2 | பத்தி 3 |
|---|---|---|
| பகுதி | 8 அவுன்ஸுக்கு அதிகமான பாணின் ஆகக் கூடிய விலை | 8 அவுன்ஸும் அதற்குக் குறைவான நிறையுமுள்ள பாணின் ஆகக் கூடிய விலை |
| | ரூ. ச. | ரூ. ச. |
| காலி மாவட்டம் .. .. | 0 40 (16 அவுன்ஸுக்கு) | 0 21 (8 அவுன்ஸுக்கு) |

குறிப்பு.—இவ்விலைகள் மேலே குறிப்பிட்டுள்ள பாண் விற்கப்படவேண்டிய விதிக்கப்பட்ட விலைகளல்ல. இவ்வாகக்கூடிய விலைகளுக்கு மேல் இப் பொருட்கள் விற்கப்படக்கூடாது.

3–60/1—02.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 49

## அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

**கம்பனிகள் கட்டளைச் சட்டம் (145 அத்தியாயம்)**

277 (3) ம் பிரிவின் கீழ் பெயர் நீக்கத்திற்கான அறிவித்தல்

**கோறள அன்ட் கொம்பனி லிமிரட்**

கம்பனிகள் கட்டளைச் சட்டத்தின் (145 ம் அத்தியாயம்) ஏற்பாடுகளின் கீழ் 1956.9.5 இல் கூட்டப் பெற்ற கோறள அன்ட் கொம்பனி லிமிரட் என்னும் கம்பனி வியாபாரம் செய்யவில்லை எனவும், செயற்படவில்லை எனவும் நம்புவதற்கு நியாயமான காரணம் இருத்தலால் இதற்கு மாறுபாடான காரணம் காட்டாதவிடத்து, கம்பனிகள் பதிவாளராகிய ருவான்புர லிக்மன் டி சில்வா ஆகிய நான், கம்பனிகள் கட்டளைச்சட்டத்தின் (145 ம் அத்தியாயம்) 277 (3) ம் பிரிவின்படி செயலேற்று, இத்திகதியில் இருந்து 3 மாத இறுதியில் கோறள அன்ட் கொம்பனி லிமிரட் இன் பெயர் இத் திணைக்களத்தில் இருக்கும் கம்பனிகளின் பதிவேட்டில் இருந்து நீக்கப் பெற்று, குறித்த கம்பனி குலைக்கப் படுமென இத்தால் அறிவித்தல் தருகிறேன்.

ரு. லி. த சில்வா,
கம்பனிகள் பதிவாளர்.

கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
கொழும்பு 1,
1973 ஆண்டு பெப்ருபுவரி மாதம் 9 ம் திகதி.

3–2—02.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 49

**கால்நடைகளுக்குக் குறி சுடல்—திருக்கோணமலை மாவட்டத்தில் கட்டுக்குளம் பற்று (கிழக்கு) பிரிவுக் காரியாதிகாரி பகுதி**

29.11.1962 ஆம் திகதி 13,406 இலக்க இலங்கை அரசாங்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட 1958 ஆம் ஆண்டின் 29 ம் இலக்க விலங்குகள் சட்டத்தின் ஒழுங்கு விதிகளின் இரண்டாம் பாகத்தில் கூறிய 12 ஆம் விதியின் III ஆம் உப விதியின்படி 1973 ஆம் ஆண்டில் திருக்கோணமலை மாவட்டத்தில் கட்டுக்குளம் பற்று (கிழக்கு) பிரிவுக் காரியாதிகாரி பகுதியில் உள்ள கால்நடைகளுக்கு குறி சுடப்படும் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

கச்சேரி,
திருக்கோணமலை, 1973 ம் ஆண்டு பெப்ரவரி மீ 13 ந் உ.

திஸ்ஸ தேவேந்திர,
அரசாங்க அதிபர்,
திருக்கோணமலை மாவட்டம்.

| கி.சே. பகுதி இல. | கி. சே. பகுதியின் பெயர் | குறி சுடப்படும் இடம் | திகதி |
|---|---|---|---|
| 241 .. | நிலாவெளி .. | நல்லதம்பி வளவு .. | 1973 ஏப்ரல் 7 ம், 14 ம், 21 ந் நாள். மு. ப. 8.00–12.00 |
| | | கோபாலபுரம் கி. மு. ச. காணிக்குள் .. | 1973 ஏப்ரல் 9ம், 23ம், 30ம் நாள் மு.ப. 8.00–12.00 |
| | | கே. எ. ம். சுல்தானின் காணி இறக்கக்கண்டி .. | 1973 ஏப்ரல் 11 ம் 18 ம் 25 ம் நாள். மு. ப. 8.00–12.00 |
| | | வாழையூத்துத் தோட்டம் இறக்கக்கண்டி .. | 1973 ஏப்ரல் 5 ம், 19ம், 26ம் நாள், மு. ப. 8.00–12.00 |
| 240 .. | கும்புறுப்பிட்டி .. | ஏ. வி. சுப்பிரமணியம் வளவு, வட். 5, கும்புறுப்பிட்டி | 1973 ஏப்ரல் 1ம், 8ம், 15ம் நாள், மு. ப. 8.00–12.00 |
| | | என். தாமோதரம்பிள்ளை பட்டி, வட். 5, கும்புறுப்பிட்டி, | 1973 ஏப்ரல் 9ம், 23ம், 30ம் நாள், மு. ப. 8.00–12.00, |
| | | ரி. கதிகாயப்பிள்ளை வளவு, வட். 5, கும்றுப்பிட்டி | 1973 ஏப்ரல் 11 ம், 18ம், 25 ம் நாள் மு. ப. 8.00–12.00 |
| | | ஸ்ரீமன் கத்தோலிக்க ஆலயத்திற்கு அண்மையில் வட். 5, கும்புறுப்பிட்டி | 1973 ஏப்ரல் 5 ம், 19ம், 26ம் நாள் மு. ப. 8.00–12.00 |

| வி.சே. பகுதி இல. | வி. சே பகுதியின் பெயர் | குறி சுடப்படும் இடம் | திகதி |
|---|---|---|---|
| 239 | குச்சவெளி | அழகர்வளவு, இறணக்கேணி | 1973 ஏப்ரல் 9ம், 23ம், 30ம் நாள். மு. ப. 8.00–12.00 |
| | | சிவலிங்கம் வளவு, இறணக்கேணி | 1973 ஏப்ரல் 11ம், 18ம், 25ம், நாள். மு. ப. 8.00–12.00 |
| | | கந்தப்பிள்ளை வயல், குச்சவெளி, | 1973 ஏப்ரல் 5ம், 19ம், 26ம், நாள். மு. ப. 8.00–12.00 |
| | | தட்டைக்கல்லுக்கு அண்மையில், சின்னவெளி ரோட். | 1973 ஏப்ரல், 7ம், 14ம், 25ம், நாள். மு. ப. 8.00–12.00 |
| 237 | திரியாய் | குமரர் தோட்டம், திரியாய். | 1973 ஏப்ரல் 1ம், 8ம், 15ம் நாள், மு. ப. 8.00–12.00 |
| | | பேச்சுப்பிள்ளை வளவு, | 1973 ஏப்ரல் 9ம், 23ம், 30ம் நாள், மு. ப. 8.00–12.00 |
| | | காயவெளிப் பட்டி, | 1973 ஏப்ரல் 11ம், 18ம், 25ம், நாள். மு. ப. 8.00–12.00 |
| | | சவியாறு பட்டி. | 1973 ஏப்ரல் 5 ம், 19ம், 26ம் நாள். மு. ப. 8.00–12.00 |

3-14—02.03.1973 ந் திகதிய வர்த்தமானி இல. 49.

---

### கால் நடைகளுக்குக் குறி சுடல்—திருக்கோணமலை மாவட்டத்தில் மூதூர் பிரிவுக் காரியாதிகாரி பகுதி

29.11.1962 ஆம் திகதி 13,406 இலக்க இலங்கை அரசாங்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட 1958 ஆம் ஆண்டின் 29 ம் இலக்க விலங்குகள் சட்டத்தின் ஒழுங்கு விதிகளின் இரண்டாம் பாகத்தில் கூறிய 12 ஆம் ஆம் விதியின் iii ஆம் உப விதியின்படி 1973 ஆம் ஆண்டில் திருக்கோணமலை மாவட்டத்தில் மூதூர் பிரிவுக் காரியாதிகாரி பகுதியில் உள்ள கால்நடைகளுக்கு குறி சுடப்படும் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

கச்சேரி,
திருக்கோணமலை, 1973 ம் ஆண்டு பெப்ரவரி மீ 12 ந் உ.

திஸ்ஸ தேவேந்திர,
அரசாங்க அதிபர்,
திருகோணமலை மாவட்டம்.

| வி.சே. பகுதி இல. | வி. சே. பகுதியின் பெயர் | குறி சுடப்படும் இடம் | திகதி |
|---|---|---|---|
| 216 | தோப்பூர் | தோப்பூர் | பிரதி மாதமும் முதல் சனிக்கிழமை |
| | | கிளிவெட்டி | பிரதி மாதமும் 3 ம் சனியும், 3 ம் புதனும் |
| | | எல். பீ. 4 | பிரதி மாதமும் 4 ம் சனியும், 4 ம் புதனும் |
| 216எ | அல்லைநகர் | அல்லைநகர் | பிரதி மாதமும் முதற் புதன்கிழமை |
| | | கரச்சி | பிரதி மாதமும் 2 ம் சனியும், 2 ம் புதனும் |
| 219 | பள்ளிக்குடியிருப்பு | பள்ளிக்குடியிருப்பு | பிரதி மாதமும் 1ம் 2ம் சனிக்கிழமை |
| | | நல்லூர் | பிரதி மாதமும் 3 ம் 4 ம் சனிக்கிழமை |
| 218 | மல்லிகைத்தீவு | பட்டித்திடல் | பிரதி மாதமும் 1 ம் புதன்கிழமை |
| | | முன்னம்பொடி | பிரதி மாதமும் 1 ம் சனிக்கிழமை |
| | | பெருவெளி | பிரதி மாதமும் 2 ம் புதன்கிழமை |
| | | மேன்காமம் | பிரதி மாதமும் 2 ம் சனிக்கிழமை |
| | | மல்லிகைத்தீவு | பிரதி மாதமும் 3 ம் 4 ம் சனிக்கிழமை |
| 220 | சம்பூர் | சம்பூர் | பிரதி மாதமும் 1 ம் 2 ம் 3 ம் சனிக்கிழமை |
| | | இளக்கந்தை | பிரதி மாதமும் 4 ம் சனிக்கிழமை |
| 221 | கூனித்தீவு | கூனித்தீவு | பிரதி மாதமும் 1 ம் 3 ம் சனிக்கிழமை |
| 222 | கட்டைப்பறிச்சான் | சேனையூர் | பிரதி மாதமும் 1 ம் 2 ம், சனிக்கிழமை |
| | | கல்லடிச்சேனை | பிரதி மாதமும் 3 ம் 4 ம் சனிக்கிழமை |
| 223 | மூதூர் (கிழக்கு) | அக்கரச்சேனை | பிரதிமாதமும் 1ம் 2ம் சனிக்கிழமை |
| 224 | மூதூர் (மேற்கு) | இருல்குளி | பிரதி மாதமும் 3 ம் சனிக்கிழமை |
| | | வண்ணாதுறை | பிரதி மாதமும் 4 ம் சனிக்கிழமை |
| 224எ | பெரியபாலம் | கைவாய்க்காற்சேனை | பிரதி மாதமும் 1 ம் சனிக்கிழமை |
| | | உப்புக் கச்சிமடு | பிரதி மாதமும் 2 ம் சனிக்கிழமை |
| | | இலுப்பைச்சோலை | பிரதி மாதமும் 3 ம் 4 ம் சனிக்கிழமை |

(கால் நடைகளுக்குக் குறி சுடல் 1973 சித்திரை தொடக்கம் 1973 புரட்டாதி மாதம் வரையில் நடைபெறும்)

3-15—02.03.1973 ந் திகதிய வர்த்தமானி இல. 49.

**யாழ் மாவட்டத்தில் நடக்கும் திருவிழாக்களையொட்டிய யாத்திரைகளைப் பற்றிய 1951 ம் ஆண்டு திகதியிடப்பட்டிருக்கும் விதியின் 3 ம் பிரிவுக்கு அமையப் பிரசுரம்**

திருவிழாக்களின் கால எல்லைகள் இத்தால் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. வைபவங்கள் நடக்கும் காலங்களில் 1951 ம் ஆண்டு சித்திரை மாதம் 13ம் திகதி 10,234 ம் இலக்கத்துடன் "யாத்திரைகள் (யாழ்ப்பாண மாவட்டம்) விதிகள் 1951" என்னும் தலையங்கத்துடன் அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விதிகளையும் அவ்விதிகளைத் திருத்திய திருத்த வெளியீடுகளைப் பிரசுரிக்கப்பட்ட 1951 ம் ஆண்டு ஆனி மாதம் 6 ந் திகதி இடப்பட்ட அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையின் 10,263 ம் இலக்கத்துடன் அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையின் 14,715 ம் இலக்க வெளியீடாகிய விதிகளுக்கு அமைய கீழே குறிப்பிட்ட கோவில்களிலும் ஸ்தலங்களிலும் 1973 ம் ஆண்டுக்குரிய யாத்திரைகள் நடைபெறும்.

| | தொடக்கத் திகதி | முடிவு திகதி |
|---|---|---|
| 1. அர்ச். அந்தோனியார் ஆலயம், பாலைதீவு .. | 22. 3.73 .. | 25. 3. 73 |
| 2. மறிதடிப் பிள்ளையார் கோவில், மானிப்பாய் .. .. | 28. 3 73 .. | 14. 4.73 |
| 3. நயினாதீவு புத்தவிகாரை வெசாக் .. | 16. 5.73 .. | 17. 5.73 |
| 4. சித்திவிரம் அம்மன் கோவில் .. | 14. 5.73 .. | 28. 5.73 |
| 5. நயினாதீவு நாகபூசணி அம்மன் கோவில் .. .. | 1. 7.73 .. | 16. 7.73 |
| 6. நயினாதீவு புத்தவிகாரை பொசன் | 15. 6.73 .. | 17. 6.73 |
| 7. சென். செபஸ்தியான் ஆலயம், பதுமடுமுள்ளியான் .. | 29. 6.73 .. | 8. 7.73 |
| 8. மாவிட்டபும் கந்தசாமி கோவில் | 5. 7.73 .. | 29. 7.73 |
| 9. சென். ஜேம்ஸ் ஆலயம், கிலாலி .. | 16. 7.73 .. | 25. 7.73 |
| 10. பரிசுத்த செபமாலை மாதாவின் ஆலயம், சின்னமடு .. | 27. 7.73 .. | 5. 8.73 |
| 11. கீரிமலை ஆடி அமாவாசை .. | 29. 7.73 .. | 30. 7.73 |
| 12. செல்வச்சன்னதி கோவில், தொண்டைமனாறு .. .. | 28. 8.73 .. | 12. 9.73 |
| 13. நல்யாத்திரை மாதாவின் ஆலயம், சாடி வேலணை .. | 15. 9.73 .. | 24. 9.73 |
| 14. வல்லிபுரக்கோவில், துன்னாலை .. | 26. 9.73 .. | 12. 10.73 |
| 15. செல்வச்சன்னதி கோவில் தொண்டைமனாறு கந்தசஷ்டி .. | 26.10.73 .. | 1.11.73 |

எம். ரீ. டபிள்யு. அமரசேகரா
யாழ் மாவட்ட அரசாங்க அதிபர்,

யாழ்ப்பாணம், கச்சேரி,
1973 பெப்புரவரி மாதம் 13 ந் திகதி.

3–22—02.03.73 ந். திகதிய வர்த்தமானி இல. 49

---

**குச்சவெளி வாடிவீடு**

குச்சவெளி வாடிவீட்டிற்குத் திருத்தங்கள் செய்யவிருப்பதால், 1973 பெப்ரவரி 25 ஆம் திகதியிலிருந்து மறு அறிவித்தல் வரைக்கும் வாடிவீடு தற்காலிகமாக மூடப்பட்டிருக்கும் என்பதை அறியத்தருகின்றேன்.

திஸ்ஸ தேவேந்திரா,
அரசாங்க அதிபர்,
திருகோணமலை மாவட்டம்.

கச்சேரி,
திருகோணமலை,
1973 ம் ஆண்டு பெப்ரவரி மீ 20 ந் உ.

3–147—02.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 49

## அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய புதிய கிரய விகிதங்கள்

**01.12.1968 தொடங்கி அமுலுக்கு வந்தது**

# "ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி (கெசற்)"

## வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர் அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. **சனிக்கிழமைகளில்** மு. ப. 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரையும், மற்றும் நாட்களில் மு. ப. 8 மணி முதல் பி. ப. 3.30 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. **சனிக்கிழமைகளில்** மு. ப. 11 மணிக்கும், மற்றும் நாட்களில் பி. ப. 2.00 மணிக்கும் **பணம் கொடுக்கல் வாங்கல்** முடிவுறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது **போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.**

6. **நகலை கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல் விசேஷமாக ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்படவேண்டிய விளம்பரங்கள் "சுப்பிறீம் கோட் புறெக்ரால்" கைகொயப்பமிடப்பட்டு அல்லது கையொயப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் **1968 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 01 ந் திகதியிலிருந்து** பின்வருமாறு :—

| | ரூ. ச. |
|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய .. .. .. | 20 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி .. .. | 20 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் .. .. .. | 220 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் .. .. | 440 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி வெளியிடப்படும்.** அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 01 ம் திகதி தொடக்கம் வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம்** அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.

13. சந்தா விபரம் **01.12.68 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.**

| ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் ரூ. ச. | வெளியூர் ரூ. ச. |
|---|---|---|
| ஒவ்வொரு பகுதியும் .. .. .. | 46 0 | 60 0 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு .. .. .. | 36 0 | 42 0 |
| முதற் பகுதியின் இரு பிரிவுகள் .. .. | 43 50 | 51 50 |

**ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக்கூடியதுமான காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.**

### தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | விலை ரூ. ச. | தபாற் செலவு (உள்ளூர்) சதம் |
|---|---|---|
| (அ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் ஒவ்வொரு பகுதியும் .. .. | 0 50 | 26 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் ஒவ்வொரு பகுதியும் .. .. | 1 0 | 30 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 30 | 15 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் முதற்பகுதியில் ஒவ்வொரு பிரிவும் .. | 0 60 | 15 |

**இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத் தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற் பெட்டி இல. 500, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானி களுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாச தாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேர போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை 1973

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திக்தியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| மாச்சு | 2. 3.73 | வெள்ளி | 23. 2.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 9. 3.73 | வெள்ளி | 2. 3.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 16. 3.73 | வெள்ளி | 9. 3.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 23. 3.73 | வெள்ளி | 16. 3.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 30. 3.73 | வெள்ளி | 23. 3.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| ஏப்பிறல் | 6. 4.73 | வெள்ளி | 30. 3.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 11. 4.73 | புதன் | 6. 4.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 19. 4.73 | வியாழன் | 11. 4.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 27. 4.73 | வெள்ளி | 19. 4.73 | வியாழன் | ந.ப. 12.00 |

எம். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ௵ ஓகத்து மீ 18 உ.

ஸ்ரீ லங்கா (இலங்கை) அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.